# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 314 புரட்டாதி 22ஆம் நாள் புதன்கிழமை 09 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## பொதுச் சொத்து முறைகேட்டை முறையிட புதிய இலக்கம்

கொழும்பு, ஒக்.9

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போது பொதுச் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுமாயின் அல்லது முறைகேடு செய்யப்படுமாயின் அது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கான அவசர சேவை தொலைபேசி இலக்கங்களை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு அறிமுகம் செய்துள்ளது.

இந்த முறைப்பாடுகளை 0763223662, 0763223448 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ அல்லது PPPR@TISRILANKA.ORG என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ மேற்கொள்ள முடியும்.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பின் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் செயற்திட்டமானது 2006 ஆம் 25

### முல்லைத்தீவு நீராவியடி ஆலய விவகாரத்தில்

# தமிழர் தரப்பாலேயே குழப்பம் ஏற்பட்டது

## மகிந்த தரப்பு எம்.பி. நாடாளுமன்றில் வாதம்

கொழும்பு, ஒக்.9

முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலய விடயத்தில் தமிழர் தரப்பே குழப்பங்களை ஏற்படுத்தி ஒட்டுமொத்த சிங்கப் பௌத்த மக்களையும் வேதனைப்படுத்தியுள்ளது என்று மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கம தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 25

## முல்லைத்தீவு விபத்தில் மாணவன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக்.9

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் நடந்த விபத்தொன்றில் 9 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 11வயதுடைய மற்றொரு மாணவன் படுகாயங்களுடன் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த செ.கேதீஸ்வரன் (வயது-9) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். த.கலிஸ்ரன் (வயது-11) என்ற மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

மாணவர்கள் இருவரும் ஈருருளியில் வீதியில் பயணித்தபோது கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகினர். விஜயதசமி பூசையில் கலந்து கொள்ளச் சென்ற 09

## முல்லை. நீராவியடி விடயத்தில் குற்றவாளிகளை தண்டியுங்கள்

### நாடாளுமன்றில் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.9

நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அரசை வலியுறுத்துகின்றேன். அதில் நீதிமன்ற நிலைநாட்டுவதற்குத் தவறியது மாத்திரமன்றி, அது மீறப்படும் போது அதற்கு வசதியேற்படுத்திய பொலிஸாரையும் உள்ளடக்க வேண்டும். 25

## வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஒக்.9

தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பி மற்றும் சின்னம் பொறித்த ரீசேட் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள் 09

## இன முரண்பாடுகளை தவிர்க்க நீதிமன்ற தீர்ப்பை கைவிட்டோம்

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் முல்லை. பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.9

இன முரண்பாட்டைத் தவிர்ப்பதற்காகவே நீதிமன்றத் தீர்ப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை என்று முல்லைத்தீவுப் பொலிஸார் மனித உரிமை ஆணைக்குழுவினரின் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத் 25

## கோத்தா - சஜித் இடையே பெரும் போட்டியே நிலவும்

### ஒப்புக்கொண்டது மகிந்த அணி

கொழும்பு, ஒக்.9

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச மற்றும் சஜித்துக்குமே மாபெரும் போட்டியுள்ளது. சஜித் அரச தலைவரானால் தற்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசே தொடரும். இந்த ஆட்சியால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வியத்மக அமைப்பின் தலைமை காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துள 09

## அரசியல் தீர்வால் பிளவு ஏற்படுமாம்

### பெரமுன நிபந்தனைகளை ஏற்காது என்கிறார் செஹான் எம்.பி.

கொழும்பு, ஒக்.9

தனிப் பௌத்த சிங்கள வாக்குகளை மாத்திரம் பெற்றுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கம் பொதுமக்கள் முன்னணிக்கு (பொதுஜன பெரமுன) கிடையாது. ஆனால் தமது சுய நலனுக்காகத் தமிழ் மக்களை பகடைக்காயாகக் கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு ஒருபோதும் உடன்பட முடியாது. அரசியல் தீர்வு இனங்களுக்கிடையில் மீண்டும் பிளவையே ஏற்படுத்தும். 25






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி கிருபாகரன் றஜினா**
**(157 புள்ளிகள்)**



கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய மாணவியாகிய செல்வி கிருபாகரன் றஜினா தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்றமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வேதவனப்பிள்ளையாரின் ஆசியுடன் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் :- அப்பம்மா, சிறிய தந்தைமார், அன்ரி, கீர்த்தி
இராமலிங்கம் மில், கல்வயல், சாவகச்சேரி.

(AC/350)(11.17)

## மரண அறிவித்தல்



### நாகமணி மார்க்கண்டு

தாமோதரம்பிள்ளை வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமணி மார்க்கண்டு நேற்று (08.10.2019 ) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சாவித்திரிதேவியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரன் (ஜேர்மனி), கலைமகள் (ஆசிரியை, யா / கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை) காலஞ்சென்ற திருமகள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தினி (ஜேர்மனி), சியாம்சுந்தர் (ஆசிரியர், யா/ கச்சாய் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலப்சன் சபீனா நிவேதா சிவோதன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.10.2019) செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல் :குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகாம்பிகை கனகசபாபதி(பபா)



**தோற்றம்** 31.05.1938 **மறைவு** 07.10.2019

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கை மற்றும் 258, பருத்தித்துறை வீதி, நல்லூரை (City tex அருகில்) நிரந்திர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை கனகசபாபதி 07.10.2019 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கப்பூர் சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சபாரட்ணம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் கனகசபாபதியின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற கனகரட்ணம் (செல்லப்பா சுவாமிகளின் பேரன்) அவர்களின் மைத்துனியும், தியாகலிங்கம் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், சுகந்தியின் அன்பு மாமியும், எர்வின், பிரவின், லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, கமலாம்பிகை, கனகசுந்தரம் மற்றும் ஞானாம்பிகை, யோகேஸ்வரி, சிவபாதசுந்தரம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.10.2019 வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/28571)

258, பருத்தித்துறை வீதி
நல்லூர்.

தகவல்: சபாரட்ணம் கனகசபாபதி
(கணவர்) 021 222 9093
க.தியாகலிங்கம் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
**கலைமகள் சியாம்சுந்தர்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**நாகமணி மார்க்கண்டு**
அவர்கள் 08.10.2019 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலை சமூகம்**
**யா/ கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை**

## கணக்காளர் பதவி வெற்றிடம்

**எமது நிர்மாண நிறுவனத்துக்கு கணக்காளர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

- **க.பொ.த.உயர்தரம் சித்தி (வர்த்தகம்)**
- **மூன்று வருட தொழில்சார் அனுபவம்**
- **23 - 50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

மேற்படி பதவிக்குத் தகுதியுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரிகள் 21.10.2019 திங்கட்கிழமைக்கு முன்னதாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு சுயவிவரங்களை மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

K.P.K. கட்டட ஒப்பந்தகாரர் (ICTAD Grade C4)
**இல.108, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.**
**(புதிய தண்ணீர்தாங்கி முன்பாக)**
**தொலைபேசி இல :-021 492 3264**
**மின்னஞ்சல் :-** kpkkilinochchi@gmail.com

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 13 . 10 . 1929
இறைவன் அடியில் 20 . 09 . 2018

### அமரர் கந்தையா வேலாயுதம்

**திதி : 09.10.2019 (புதன்கிழமை)**

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள் பாசம்
வேண்டும் இந்த மண்ணில்
உங்கள் நினைவுகள் என்றும்
தூண்டும் உங்கள் கனவுகளால்
துவண்டு நாம் சோரும் போது
மீண்டும் எம்மிடம் நீங்கள் வந்திட
ஆண்டவனை வேண்டிடுவோம் என்றும்

(CS 00982)(14.17)

**"கணபதி"**
**வதிரி, கரவெட்டி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தங்கமுத்து அருணாசலம்



கல்லை வேம்படி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமுத்து அருணாசலம் நேற்று (08.10.2019) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு அன்னமுத்து தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் காங்கேயன் (மோகன்- ஜேர்மனி), காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராவின் அன்பு மாமியும் அரன்கேயன், சரண்கேயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் மகேஸ்வரி, கந்தவனம் (தம்புகடை), மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.10.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லை வேம்படி,
சுழிபுரம்

**தகவல்: குடும்பத்தினர்.**

## Hottel வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் 10 Rooms (A/C) உடன் இணைந்த குளியலறை தளபாட வசதியுடன் காலி வீதிக்கு முகப்பாக உடனடி வாடகைக்கு விடப்படும்.

**0777 96 7878**

(CS 28543)(14.17)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் ரவுணில் உள்ள புத்தக சாலைக்கு அனுபவமுள்ள ஆண்/ பெண் உதவியாளர் தேவை

**0722875625** (CS 28558)

## அறை வாடகைக்கு உண்டு

வேம்படி பாடசாலைக்கு
அருகாமையில்
பெண்களுக்கு மட்டும்.

**075 999 9793**

(CS 28573)(14.17)

## சேவை விபரம்

மரச்செக்கு மூலம் நல்லெண்ணை தேங்காய் எண்ணை ஊற்றிக்கொடுக்கப்படும். (1Kg- 25.00). மேலும் அனைத்து அரைத்தல் வேலைகளையும் ஒரே இடத்தில் செய்து கொள்ளலாம்.
தொடர்பு:- பிருந்தா அரைக்கும் ஆலை, 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். **T.P -077 991 2304**
(பொதியிடல், பில்கிளாக், உதவியாளர் என்பவற்றுக்கு பெண வேலையாள்கள் தேவை.

## பசுமாட்டைக் காணவில்லை

அல்லாரை வடக்குப் பகுதியில்
மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த
**TK** எனக் குறியிடப்பட்ட பசுமாட்டைக்
காணவில்லை.ஒருமாதக் கன்று
கத்திக்கொண்டிருப்பதால் பசுமாட்டைக்
கண்டவர்கள் அறியத்தரவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 407 4209** (AC349)(11.17)

## மணமகள் தேவை

வடமராட்சி யாழ் இந்து கௌரவ குடும்ப 35 வயது குற்றமற்ற மகம் 3ஆம் பாதம் யாழ்நகரில் பிரபல ஹோட்டலில் முகாமையாளராக பணிபுரிபவருக்கு 31 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மகம் பொருத்தமுடையது.

**0774710814** (00975)

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் விழா ஒழுங்கமைப்பு மற்றும் மேடை அலங்கரிப்பு (Event Management) நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

**மேடை அலங்கரிப்பு உதவியாளர்கள்**
(அடிப்படை சம்பளம் 20,000)
**பராமரிப்பாளர்**
(அடிப்படைச் சம்பளம் 15,000)

வயதெல்லை 18-30 ஆண்கள்
வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (வெளி மாவட்டமானவராயின் தங்குமிட வசதி வழங்கப்படும்) ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 201 8833**

## விற்பனைக்குண்டு

உரும்பிராய் தெற்கில்
பலாலி வீதிக்கு
அண்மையாக
4 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.

**077 959 5702,**
**075 039 8826**

## ES Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 08.10.2019 | 2641 | சிகப்பு |

கும்பம்

வெற்றி இலக்கங்கள்: 20 21 32 56

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,574,242/=

09.10.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 1610 | 08.10.2019 |

வெற்றி இலக்கங்கள்: 03 17 18 34 I

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.38. 820. 388 /=

## அத கோடிபதி

ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 755

வர்ணம் : இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2019.10.08

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,357,745/-

வெற்றி இலக்கங்கள்: 18 20 21 61 E

SEASON

விசேட வெற்றி இல. 1365

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1054

சீட்டிழுப்பு திகதி 2019.10.07 திங்கட்கிழமை

N 06 42 46 54

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,296,648/-

## MASSIVE VEHICLES AUCTION SALE



15th of October

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

VAVUNIYA

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View – 11th, 12th & 14th October

(Please refer the Udayan On 10th of October 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## காணி விற்பனைக்கு

காரைநகர் களபூமியில்

9பரப்பும் 4குளியும் சுற்றுமதில் கொண்ட நெற்காணி விற்பனைக்கு உண்டு.

077 955 0165, 077 918 6314

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கந்தர்மடப் பகுதியில் வசிக்கும் வயோதிபரை பராமரிப்பதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

0779923476

## சிறுநீரகம் தேவை

B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை

T - 076 239 9874

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
- விற்பனையாளர்
- கணக்காளர்
- சிட்டை எழுதுபவர் தேவை.

தொடர்புகளுக்கு: யாழ் போன்சொப்
இல.9, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
077 361 1282

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடவையகத்திற்கு ஆண் விற்பனையாளர் உடனடியாக தேவை. பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.

077 736 2136

STUDY , WORK & SETTLE IN

CANADA
GERMANY
FRANCE
LATVIA

EUROPE
செல்ல வழிகாட்டல்

BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
BANK BALANCE

(NO IELTS)
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM

ROYAL EDUCATION SERVICE
128 JAMPETTAH STREET, COLOMBO 13

0777 911 649 / 0777 216 291

குறைந்த செலவில். விரைவில் பயணம்.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

சம்பத் சமாச்சார
அரச ஓய்வூதியம் பெறுநர் கடன் திட்டம்



அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் உங்கள் கடமைகள் இன்னும் எஞ்சியிருக்கலாம்.

அதனால்தான், அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உங்களுக்கு, சம்பத் சமாச்சார ஓய்வூதியதாரர்களுக்கான கடன் திட்டத்தை வழங்குகிறோம்.

- 2 மில்லியன் ரூபாய் வரை கடன் தொகை
- குறைந்த வட்டி வீதம்
- 10 வருடங்கள் வரையான மீள் செலுத்தும் தவணை
- ஒரே நாளில் கைக்கு பணம்
- பிணை நிற்பவர்கள் அவசியம் இல்லை

உங்கள் ஓய்வூதிய கணக்கை இன்றே சம்பத் வங்கிக்கு மாற்றிடுங்கள்.
வாழ்வின் அழகிய நாட்களை வாழத் தொடங்குங்கள்.

மேலதிக விபரங்களுக்கு 0112 30 30 50 அல்லது அருகிலுள்ள சம்பத் வங்கிக்கு வாருங்கள்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 10 . 1970



உதிர்வு 20 . 09 . 2018

### ஆறுமுகம் சுதாகரன்

(முன்னாள் ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)



அகங்களில் அன்புருவாய் திகழ்ந்த பண்பாளனே
அவை நடுவே நீங்கள் நின்றால் தாரகை நடுவே தண்மதி போன்றிருக்குமே
தீயாய் சுடுகுதப்பா தேம்பித் தவிக்கின்றோம் –
உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல்
கண்ணிமைத்து விழிக்கவில்லை ஒரு ஆண்டு ஆனதுவோ
காலனின் கோபமோ காலத்தின்சாபமோ–
காலனவன் கைப்பிடியில் கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு சென்ற உங்கள் அழிக்க முடியாத
நினைவுகள் பத்திரமாய் எம்மனத்திற்குள் பதிந்திருக்கும்
மறுபிறப்பெடுத்து எம் குடும்பத்திற்குள் மறுபடியும்
வருவீர்கள் என எதிர்பார்த்து – உங்கள்
வரவை வழிமேல் விழிவைத்து காத்திருக்கின்றோம்.
எங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்து
நீங்கள் தந்த அன்பின் நிழலிலே வாழும் உங்கள்

**குடும்பத்தினர்**

இன்று (09.10.2019) புதன்கிழமை 12 மணியளவில் நடைபெற இருக்கும் அன்னாரது முதலாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனையில் கலந்தும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 04 . 1942



உதிர்வு 05 . 10 . 2019

### நாகமணி கணேசன்

**(மெக்கானிக்)**

சாரதா வீதி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கணேசன் கடந்த 05.10.2019 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினம், சிவகுரு, அழகம்மா, செல்லையா, கண்மணி, கைலாயன், சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தையல்நாயகியின் அன்பு கணவரும் சிவதாஸ், மைதிலி, சுபாஜினி, ஜெயந்தினி காலஞ்சென்ற கௌசிகாஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாமதி, சிவநாதன், பசுபதி, வரத றாஜன், ஆகியோரின் அன்பு மாமனாரும் மிருஸ், விசிகா, திதுசா, விதுலாஸ், அஸ்விதன், அக்சயா, அபிலாஸ், விவேக், விஸ்பன், விகாஸ் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் முத்துக்கிருஸ்ணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாரதாவீதி, சங்கத்தானை எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (09.10.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 950 5182** தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







| அமுதலிங்கம் கமலாதேவி | பொன்னையா சிவக்கொழுந்து | பொன்னையா இராஜரட்ணம் |
|---|---|---|
| தோற்றம் 05.07.1956 மறைவு 20.09.2018 | | தோற்றம் 15.08.1945 மறைவு 10.05.2009 |

உரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ்சேர்த்து
எம்மை விட்டகன்று ஓராண்டாகியும்
பதிபதம் இணைந்து பத்தினியாய் வாழ்வீரம்மா!

அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட அமுதலிங்கம் கமலாதேவி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியுடன், முத்தையன் கட்டை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா சிவக்கொழுந்து, பொன்னையா இராஜரட்ணம் ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

**"பணம் பந்தியிலே....
குணம் குப்பையிலே!"**

எல்லாளன் வீதி,
நவக்கிரி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர் இ. அமுதலிங்கம்
077 127 4730

(cs.28476) 913.17)

## மரண அறிவித்தல்

### திருமதி தேவிகா ஸ்ரீ ஆனந்தராஜன்



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவிகா ஸ்ரீ ஆனந்தராஜன் 08.10.2019 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீ ஆனந்தராஜன் ஆச்சாரியார் (சிற்பக் கலைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் ரேணுஜா, கிருஷாந் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இன்று (09.10.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 53/6, கன்னாதிட்டி வீதி, தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: S.விஜயன் - 0778374994
S.ரகுநாதன் - 0776693636

(CS 28574)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு காசிப்பிள்ளை இராமலிங்கம் கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்வழிச் சிகிச்சையாளர்- யாழ்.போதனா வைத்தியசாலை)



தோற்றம் 13.08.1958 மறைவு 08.10.2019

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டு இருந்த இராமலிங்கம் கணேசலிங்கம் 08.10.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மருதப்பு செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும், கஜாந்தி, கோகுலப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மங்கையற்கரசி, கனகம்மா, சண்முகலிங்கம், புவனேஸ்வரி, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலிங்கம், கணபதிப்பிள்ளை, கலைவாணி, நவரத்தினம், தவேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கதிர்காமநாதன் - மகாலஷ்மி,நமசிவாயம் - அம்பிகாவதி, விமலேந்திரன் - மங்கையற்கரசி, சுந்தரமூர்த்தி - சறோஜா, நவரத்தினராஜா - கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2019 புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 28577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில்
03 . 06 . 1940

பொன்னுலகில்
20 . 09 . 2018

## அமரர் பாலசிங்கம் லிங்கநாதன்

**(உரிமையாளர்- வசந்தம் மருந்தகம்)**

**திதி : புரட்டாதி மாதம் பூர்வபக்க ஏகாதசி (09.10.2019)**

**கண்ணயர்ந்த வேளையில் ஓராண்டு**
**காற்றைப்போல கடந்து போயிருந்தாலும்**
**ரணமாய் வலிக்கின்றன – உங்கள் நினைவுகள்**
**எங்கள் இதயத்தில்....**

என்றும் உங்கள் நினைவுகளுடன்

50/45, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

**திருமதி இரங்கநாயகி செல்வநாதன்**

தோற்றம் 15.05.1946 — மறைவு 23.09.2019

கடந்த 23.09.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த திருமதி இரங்கநாயகி செல்வநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (10.10.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது வீட்டிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிமுதல் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நல்லூர் - ஸ்ரீ துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**உங்கள் வருகையை எதிர்பார்க்கும்**
**குடும்பத்தினர்.**
**077 971 6191**
**இல.160, கோயில்வீதி, நல்லூர்.**



## பண்டிகைக்கால தற்காலிக அங்காடி வியாபாரம்

எதிர்வரும் தீபாவளி, கிறிஸ்மஸ், தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகைக்காலங்களில் தற்காலிக அங்காடி வியாபாரம் செய்வதற்கு யாழ். மாநகர சபையால் பிரத்தியேகமாக ஒதுக்கப்படும் இடத்தில் இடம் தேவைப்படும் உள்ளூர் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றோம். தங்கள் பதிவுகளை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும். தங்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி எதிர்வரும் 20.10.2019 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
**யாழ் வணிகர் கழகம்,**
**இல.165, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இலக்கம்:

**021 222 8593 | 021 222 2367**


**இப்பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன்பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுல்கள்**

**நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் உலகளாவிய முறையற்ற புலம் பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் ( Global Assistance for Irregular Migrants) இத்திட்டத்தினூடாக நாடும் திரும்பவும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் முடியும்.**

நீங்கள் மேற்கு ஆபிரிக்க நாடொன்றில் தங்களது பயணத்தை ஒழுங்கமைத்த முகவரால் கைவிடப் பட்ட நிலையில் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளீர்களா? அப்படியாயின் இப்பகுதி தங்களுக்கு நிச்சயமாக உதவக்கூடும்? வேறு நாடுகளில் திக்கற்ற நிலையில் முகவரால் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவும் வாய்ப்புகள் உள்ளன.

உலகளாவிய முறையற்ற புலம் பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் (Global Assistance for Irregular migrants)

இன்றைய இந்த பகுதியினூடாக நாம் IOM நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் உலகளா விய முறையற்ற புலம் பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் (Global Assistance for Irregular migrants - GAIM) தொடர்பாக சிறிது தெரிந்த கொள்வோம். அதனை வாசிக்கும் போதே எம்மில் பலருக்கு இத் திட்டத்தை ஏன் நாம் அறிந்த கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். எனவே நாம் இந்த கெயிம் GAIM திட்டம் என்றால் என்ன? அதனால் வழங்கப்டும் சேவைகள் எவை என்பது தொடர்பாக தெரிந்து கொண்டால் அதன் முக்கியத்தவத்தை புரிந்து கொள்ள முடியும்.

நீங்கள் முறையற்ற புலம் பெயர்வினால் பாதிக்கப்பட்ட ஒருவராக இருக்கக்கூடும்.

நீங்கள் வளர்ச்சியடைந்த நாடொன்றை சென்றடைவதற்காக இலங்கையை விட்டு வேறொரு நாடொன்றுக்கு குடி பெயர்ந்து அங்கு பயண ஏற்பாடு செய்த முகவரால் நிர்க்கதிக்காளாகியிருப்பின் GAIM திட்டத்திற்கு ஊடாக தாங்கள் நாடு திரும்புவதற்கு உதவும் வாய்ப்புள்ளது. இக் கெயிம் திட்டத்தினூடாக தாங்கள் நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டுள்ள நாட்டில் உள்ள IOM அலுவலகத்திலோ அல்லது அருகிலுள்ள நட்டிலுள்ள IOM நிறுவனத்தினை தொடர்பு கொள்வதன் மூலம் தாங்கள் நன்மையடைய முடியும்.

ஆட்கடத்தல்காரர்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் கனடாவுக்கு அனுப்பி வைப்பதாக பிழையான வாக்குறுதிகளை வழங்கி புலம்பெயர்வாளர்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றனர். அதேவேளை பாதிக்கப்படுவோரும் அவர் சார்ந்த சமூகமும் மேற்காபிரிக்க நாடொன்றில் இருந்து கொண்டு கனடாவுக்கான வீசாவை பெற்றுக்கொள்ளவோ அல்லது கனடாவில் தஞ்சம் கோரவோ முடியும் என நம்ப வைக்கப்படுகின்றனர். ஆனால் இது உண்மைக்கு புறம்பானது. நீங்கள் இவ்வாறான பிழையான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றப்படலாம் என்பதோடு தங்களது பணம். சொத்துக்கள் மற்றும் பொன்னான நேரத்தையும் இழக்கக்கூடும். நீங்கள் இவ்வாறான இடைத்தங்கல் நாடொன்றில் நிர்க்கதிக்கு உள்ளாகி எவ்வாறு நாடு திரும்புவது என்று தெரியாமல் உள்ளீர்கள் என்றால் தயவு செய்து உதவிகளுக்கு IOM நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும்

கனடா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் மீள்திரும்புவோருக்கு சிறு தொழில் முயற்சிகளுக்கான உதவி வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்க. உலகின் எந்த நாட்டிலாவது (மத்தியகிழக்கு நாடுகள் தவிர்ந்த) நிர்க்கதியாக கைவிடப்பட்ட இலங்கையர் யாரும் கீழுள்ள இலக்கங்களின் ஊடாக எம்மை தொடர்பு கொள்ள முடியும்.

**IOM Sri Lanka**

Telephone : +94 11 532 5362
Hotline: 077 441 0086
Viber: 077 441 0086
WatsApp: 077 441 0086

சுயவிருப்பின் பேரில் இலங்கைக்கு திரும்பி வர விரும்புவர்களுக்கு மாத்திரமே இத்திட்டத்தில் நன்மையடையமுடியும். அது தன்னிச்சையான நாடு திரும்பல் (Voluntary return) ஆக அமையும் பட்சத்தில் மாத்திரமே கெயிம் திட்டத்தினூடாக நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிட்ட உதவிகளும் வழங்கப்படும்.


- நிர்கதியாகி இருக்கும் நாட்டில் அவசரகால தங்குமிடம்
- மருத்துவ உதவி
- உணவு
- தேவையான உடைகள்
- வீடு திரும்புவதற்கான விமான பயண சீட்டு
- பயண ஆவணங்களை பெற்றுக்கொடுத்தல்
- நாடு திரும்பிய பின்னர் உடனடித் தேவைகளை பூர்த்திசெய்வதற்கான உதவி
- விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்புவதற்கான போக்குவரத்து உதவி
- மருத்துவ உதவி

இவ்வாறு நாடுதிரும்பியவர்களின் காணொளிகளை IOM Sri Lanka and Maldives என்ற முகநூல் பக்கத்தில் காணமுடியும்.

இன்றைய விடயபரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை முறையற்ற புலம்பெயர்வும் அதனால் ஏற்படக் கூடிய சட்ட ரீதியான பாதிப்புக்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம் . தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு. கீழே தரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவதனூடாக. நாளொன்றுக்கு தெரிவு செய்யப்படும் 20 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் 500 ரூபா பெறுமதியான பரிசினை வெல்லும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன். கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க்காட்டப்பட்ட SMS வடிவத்தில் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவுதனூடாக குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் சரியான விடைக்குரியவர்கள் 200 ரூபா பெறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்ல முடியும். போட்டி இறுதி திகதியின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத்தரப்படுவார்கள்.

வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற வெளிநா[illegible] பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் தி[illegible] தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் [illegible]பனவரும் தொலைபேசி இலக்கத்தினூடாக அழைத்து விபரங்களை பெறமுடியும் 0774410086

### குறுக்கெழுத்து போட்டி




**மேலிருந்து கீழ்**

1. கெயிம் (GAIM) திட்டத்தினூடாக இடைத்தங்கல் நாட்டிலும். மீள் திரும்பிய பின்னரும் இவ்வுதவி வழங்கப்படும்?
1. கெயிம் திட்டத்தினூடாக இடைத்தங்கல் நாட்டில் வழங்கப்படும் உதவிகளில் ஒன்று?
3. முறையற்ற புலம் பெயர்வாளர்கள் போலி …………… ஆல் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர்?
4. மேற்காபிரிக்க நாடு ஒன்றில் இருந்து கனடாவுக்கான வீசாவினை பெற்றுக்கொள்ளமுடியும்? ஆம்/இல்லை.
5. பாதிக்கப்பட்டவர் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவிக்கும் நடைமுறையானது ………………… நாடு திரும்பல் என அழைக்கப்படும்.
6. பயண ஏற்பாடு செய்த முகவர் தங்களை ஏதாவது ஒரு நாட்டில் நிராதரவாக கைவிட்டு செல்லும் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?
7. கெயிம் திட்டத்தினூடாக நன்மையடையக் கூடிய நாடுகளின் வலையம்.
8. அவசரகால தங்குமிட வசதி கெயிம் திட்டத்தினூடாக மீள் திரும்ப வழங்கப்படும் (தலை கீழாகவுள்ளது) (முன்னர் / பின்னர்)

**மேலிருந்து கீழ்**

1. கெயிம் திட்டத்தினூடாக நன்மையடைய முடியாத நாடுகளின் வலையம்.
4. பயண ஏற்பாடு செய்த முகவர் தங்களை ஏதாவது ஒரு நாட்டில் நிராதரவாக கைவிட்டு செல்லும் நாடு எவ்வாறு அழைக்கப்படும்.
8. கெயிம் திட்டமானது ……………… புலம்பெயர்வாளர்களுக்கு உதவி வழங்கும் திட்டமாகும்.
9. GAIM (கெயிம்) திட்டமானது எந்த நாட்டு அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படுகின்றது
10. கெயிம் (GAIM) திட்டத்தினூடாக தன்னினிச்சையாக நாடு திரும்புபவர்களுக்கு சிறு தொழில் முயற்சிக்கான உதவி வழங்கப்படும்? சரி/ பிழை

தாங்களது நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா வீசாவில் செல்லமாறும் அங்கு கிடைக்கக் கூடிய ஏதாவது வேலையை கொஞ்ச நாட்கள் வேலைக்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யுமாறும் கூறுகிறார்? இது ஒரு முறையான / பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கிறீர்களா?

ஆம்
இல்லை

இக்கேள்விக்கான பதிலை கீழ்க்குறிப்பிட்ட முறையில் IOM ன் நேரடி தொலைபேசி இலக்கமான 0774410086 க்கு SMS /குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக ரூபா200 பெமதியான தொலை[illegible] பேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்

SMS /குறுஞ்செய்தி அனுப்ப வேண்[illegible] ..டிய வடிவம

[illegible] வயது இடம் விடை ---------------------------------------- 0774410086

உதாரணம்
M_14_Jaffna_Answer
ஆண்_14_யாழ்ப்பாணம்_சரியான விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## கலாபூஷணம்
## தா.சு.லோகநாதன்

[கலைச்சூரியர், கலைவாரிதி, சமாதான நீதவான்]

(ஓய்வுபெற்ற முன்னாள் உத்தியோகத்தர் யாழ்.மாநகரசபை, நாடகக்கலைஞர், கேசாவில் முத்துவிநாயகர் முன்னாள் தலைவர், கோம்பயன்மணல் இந்துமயான நிர்வாக உறுப்பினர்)



**தோற்றம்** 10.11.1935 **மறைவு** 05.10.2019

கேசாவில் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சங்கானை தற்போது **BS** ஒழுங்கை, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தா.சு.லோகநாதன் கடந்த 05.10.2019 சனிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன், காலஞ்சென்ற பேரின்பநாதன், ருக்மணிதேவி, நாகேஸ்வரி (கனடா), குகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்தரராஜா, காலஞ்சென்ற சௌந்தரராஜன், இந்திராணி, செல்வராணி (சுவிஸ்), ஶ்ரீஸ்கந்தராஜா (நோர்வே), காலஞ்சென்ற தியாகராஜா, தேவராணி, யோகமலர் (லண்டன்), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், பூபாலசிங்கம் (கனடா), மல்லிகாதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், குமுதினி, நந்தினி, குமணன் (கனடா), தாமோதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும், சிவராஜசேகர் (நவந்தமில் தட்டாதெரு), மதியழகன் (பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), இலங்கேஸ்வரி (கனடா), ஈஸ்வரி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துவாரகன், தனாதரன், யதுசாரகன்,தரங்கினி, தர்மினி, புருஷோத், கீர்த்திகா, சகிர்தன் ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2019) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.81, BS லேன்,**
**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/28572)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 221 7530, 077 586 0819**

# மரண அறிவித்தல்

## சிவசாமி பாலகிருஷ்ணன்

(சட்டத்தரணி J.P.U.M சமாதான நீதவானும் உத்தியோகப்பற்ற நீதிபதியும்)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி பாலகிருஷ்ணன் கடந்த 06.10.2019 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இரத்தினசாமி மற்றும் தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், வனிதாமணியின் (வசந்தா) அன்புக் கணவரும், தேனாள் (ஆஸ்திரேலியா), புருஷோத்தமன் (ஆஸ்திரேலியா), சிவகீர்த்தனன் (ஆஸ்திரேலியா), கீர்த்தனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அர்ச்சுனா, சிந்துஜா, தக்சாயணி, சாந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அகில், ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனும், கமலா தேவி, காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் சரஸ்வதி, பஞ்சலிங்கம், மங்களேஸ்வரி, சற்குணராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.10.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணிமுதல் அச்சுவேலி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் நாளை (10.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தீர்த்தாங்குள பிள்ளையார் கோயிலடி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**வசாவிளான் வீதி (அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில்), அச்சுவேலி.**

(CS/24083)(11,17)

**அர்ச்சுனா - +9476 00 57993, சாந்தரூபன் - + 9476 750 6670**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்க ஆராதனை



### திருமதி அமலதாஸ் புஸ்பராணி (மலர்)

சுன்னாகம் செல்வவளவை பிறப்பிடமாகவும் 53, மாட்டின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமலதாஸ் புஸ்பராணி (மலர்) கடந்த (06.10.2019) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு அமலதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணை கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளப்பு நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற எட்வின் சுரேந்திரா (சுரேஸ்) மற்றும் மேரி மெரிஸ்ரெலா (ராஜி), மேரி கௌசல்யா (செல்லா), மேரி சரோஜினி (ரஞ்சினி), செல்ரன் கஜேந்திரா (கஜன்), ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகையா, அல்றின், ஜெராட், சிந்துமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் எட்வின் ஜோய், எட்வின் றொசான், எட்வின் வினோஜன், பிரியங்கா, தீபிகா, அபிஷா, ஏஞ்சலினா, ஆபிரகாம், அகஸ்ரின், ஏஞ்சலின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் தேவி, மணி ஆகியோரின் அன்பு சகோதரியும் மரியதாஸின் (முத்துராஜா) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை சுன்னாகம் செல்வவளவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (10.10.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்று நல்லடக்கத்திற்காக உடுவில் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS28591(16/17)

**தகவல்: குடும்பத்தினர்**

## வேலணை பிரதேச சபை
## சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் 2019-2020

சபையானது 2019-2020 ஆண்டிற்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கவுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவு கட்டணமாக ரூபா 1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட ஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் 2019-2020" எனக் குறிப்பிட்டு பதிவு தபால் மூலம் "தவிசாளர், வேலணை பிரதேச சபை வங்களாவடி, வேலணை, எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 16.10.2019 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 221 1506 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

## நினைவலைகள்

பதினோராம் ஆண்டு

10ஆம் ஆண்டு ஆறாம் மாதம்

தோற்றம் 09 - 06 - 1947



மறைவு 11 - 10 - 2008

**அமரர் நடராசா அற்புதானந்தராசா**

திதி - ஏகாதசி (09.10.2019)

தோற்றம் 16 - 05 - 1954



மறைவு 10 - 04 - 2009

**அமரர் சதானந்தராஜ் சோதிராணி**

இறந்தும் இறவாமல் எம் இதயங்களில்
தெய்வச் சுடரொளியாய் வீற்றிருக்கும் எங்கள் அப்பாவே
உங்கள் அன்பு வழி நின்று நல்லறம் பேணி இவ்வுலகில் வாழ
உங்கள் ஆசீர்வாதம் வேண்டி நிற்கின்றோம்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 03 . 1935



இறப்பு 07 . 10 . 2019

### கனகராஜா மேரிசெல்வராணி

யாழ் தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 215/01, பொதுக்கிணறு வீதி, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராஜா மேரிசெல்வராணி 07.10.2019 அன்று கர்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான M.றிச்சார்ட் தர்மலிங்கம் ஹிரேஸ் சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகராஜாவின் பாசமிகு மனைவியும் றமேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் சுதாகரன் (லண்டன்), சுபேதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுமணன் மற்றும் விஜிதா (வவுனியா), ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவசுதன் (முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் தோணிக்கல் தரிப்பிடம்), சித்திரா (பிரான்ஸ்), விஜயா (லண்டன்), விஜயகுமாரி (பிரான்ஸ்), சுகிர்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் சுயாந் (பிரான்ஸ்), ரஜாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் தனுஷன் (பிரான்ஸ்), லோயன் (லண்டன்), கிரியா (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), சுரேயன் (பிரான்ஸ்), சுரேக்கன் (பிரான்ஸ்), சுரோமியா(பிரான்ஸ்), சுகனியன் (லண்டன்), அகல்யன் (லண்டன்), நிருஜா (லண்டன்), சமரன் (பிரான்ஸ்), சோழன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் கிறிஸ்டோ, மனோஜ்குமார், அகல்யா, நிலுஃபர் ஆகியோரின் பேர்த்தியும் அஜய்யின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2019) வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மருமகன் சிவசுதன் (சுதன்)
மற்றும் குடும்பத்தினர்
077 886 0806

பொதுக்கிணறு வீதி,
தோணிக்கல், வவுனியா

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 05 . 1945



மறைவு 05 . 10 . 2014

### அமரர் முத்துக்குமாரு சிவகுமாரன்

(பகவான் மருந்தக உரிமையாளர்)

ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
நிலையில்லா இவ் உலகில்
நிதம் நிதம் நாமிருக்க
நீங்கள் மட்டும் சென்றதேனோ
ஆறவில்லை எம் மனசு
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!


176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
076 981 0070

CS28589(16/17)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியின் சமயோசித சிந்தனை



காட்டில் ஒரு சிங்கம் ஒரு ஆட்டை அழைத்தது.
"எனது வாயில் துர்வாடை வீசுவதுபோல் இருக்கிறது நீ முகர்ந்து பார்த்து விட்டுச் சொல்... நீயும் அப்படி உணர்கிறாயா என்று"...!
ஆடு சிங்கத்தின் திறந்த வாயை முகர்ந்து பார்த்து விட்டு ஆமாம் துர்வாடை வருகிறது என்று சொல்லிற்று.
உடனே சிங்கம்,"முட்டாளே... என்னை குறை சொல்ல உனக்கு எவ்வளவு திமிர் என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது!
அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து அதனுடைய கருத்தைக் கேட்டது.
ஓநாய் முகர்ந்து பார்த்து விட்டு..." அப்படியொன்றையும் நான் உணரவில்லையே".. என்றது!
சிங்கம் "மூடனே.. பொய்யா சொல்கிறாய்?" என்று கூறி ஓநாயை அடித்துக் கொன்றது!
பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது.
நரி சொன்னது,...."நாலு நாளா கடுமையான ஜலதோஷம்" அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை" சிங்கம் நரியை விட்டுவிட்டது.

**நீதி: ஆபத்தான காலகட்டத்தில் சமயோசிதமாக சிந்தித்து வாயைத் திறக்காதிருப்பதே புத்திசாலிகளின் செயல்!**

## நாகபூஷணி திருமண சேவை

பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்.
விஜயதசமியை முன்னிட்டு
**மகளிருக்கு மட்டும்**
(08.10.2019) முதல் (10.10.2019)வரை
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையைச் சேர்ந்த செல்வன் **அ.டியானுஜன்** தரம் 05 புலமைப்பரிசில்பரீட்சையில் 157 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார் இவரைப்பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான
**ர.பிருந்தா - 123, ச.நிசாந் - 120, த.திசோக் - 115, ல.நிக்ஷிகா - 107, சே.ரதுர்ஷனா - 105**
இவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ மிருசுவில் றோ.க.த.க பாடசாலை, மிருசுவில்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் 2019 இல் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த எமது செல்வன் **காந்தரூபன் துஷான்** அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர் கல்வியில் மேலும் பல சித்திகளைப்பெற்று சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.
**வாழ்த்துவோர்**
அப்பா,அம்மா, அப்பம்மா அப்பப்பா, சித்தா(CTP), ரம்மியா அத்தை, ரஞ்சனா அத்தை, தங்கை மிதுஷிகா, பவித்திரன் (மச்சான்)

## சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி - யாழ்ப்பாணம், வவுனியா



ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்

காலம் - ஒக்டோபர் 13th திகதி ஞாயிறு மாலை 3.30
இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்), செல்வா பெலஸ் (A/C)

காலம் - ஒக்டோபர் 14th திகதி திங்கள் மாலை 6.30
இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம்

டிக்கட் 500/=,1000/= நிகழ்ச்சி அன்று மண்டபவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்
வவுனியா - தொடர்புகளுக்கு - 077 311 1245 / 070 356 8333
யாழ் - தொடர்புகளுக்கு - 077 4718 969 / 071 381 5114
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K.T. பிரசாத் (C-7794)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் ரஞ்சினி இராசநாயகம்



மண்ணில் 28.11.1957 விண்ணில் 11.09.2019

கடந்த 11.09.2019 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது அன்னையின் 31ம் நாள் நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 11.10.2019 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டும் மாலை 5:00 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசாம்மாள் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலி ஒப்புக் கொடுத்தலிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**தயவுசெய்து இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

எமது அன்னையின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறி துயர் பகிர்ந்தோருக்கும், எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், உள்நாட்டு வெளிநாடுகளில் இருந்தும் எமது துயரங்களில் பங்கு கொண்டு தொலை பேசிகள், சமூகவலைத் தளங்கள் ஊடாக அனுதாபங் களைத் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.
குடும்பத்தினர்

## வவுனியாவில்...

ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று மாலை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வவுனியா போதைத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் சந்தேகநபரின் உடமையில் இருந்து அவை மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் குறிப்பிட்டானர்.
கைது செய்யப்பட்டவர் 25 வயதுடையவர் என்றும் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்துள்ள பொலிஸார், அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் கூறினர். (எ-110,ரி4)

## முல்லைத்தீவு...

போதே அவர்கள் விபத்தில் சிக்கியுள்ளனர். கேதீஸ்வரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றைய மாணவன் படுகாயமடைந்துள்ளார். வாகனச் சாரதியும் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொதுமக்கள் அதிகளவில் கூடினர். விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதியுடன் முரண்பட்டனர். அதையடுத்து அங்கு பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். பொதுமக்கள் ஆத்திரத்துடன் காணப்பட்ட நிலையில் பொலிஸாருடனும் அவர்கள் முரண்பட்டனர். அதனால் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.
விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு நீதிமன்றப் பதில் நீதிவான் எஸ்.கெங்காதரன் விசாரணை களை மேற்கொண்டார்.
விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

(எரி3,222)

## கோத்தா...

கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கொள்கையற்ற அரசியல் பரப்புரையையே ஐக்கிய தேசிய கட்சி தற்போது முன்னெடுக்கின்றது. ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் சஜித், தான் அரச தலைவரானால் அரச தலைவர் பெறும் அரச சுகபோகங்கள், வரப்பிரசாதங்கள் ஆகியவற்றை பெற மாட்டேன் என்று குறிப்பிடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு கருத்தாகும். அவர் அரச போகங்களை துறப்பதால் மாத்திரம் நாட்டின் ஏழ்மை இல்லாமல் போய்விடாது.
நாடு தற்போது எதிர் கொண்டுள்ள சவால்களில் இருந்து மீண்டு வருவதற்கான எவ்வித கொள்கைகளையும் ஆளும் தரப்பு இதுவரையில் முன்வைக்கவில்லை. கடந்த ஐந்து வருட காலமாக நாட்டை நிர்வகித்த ஆட்சி முறைமையே மீண்டும் அவர்களால் செயற்படுத்தப்படும்.
2915ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் நாட்டு மக்கள் எடுத்த தவறான தீர்மானத்தை இம்முறையும் முன்னெடுக்க மாட்டார்கள். அமைச்சர் சஜித் பிரேமதாச அரச தலைவரானால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவே தலைமை அமைச்சர் பதவி வகிப்பார். மீண்டும் நாட்டில் பயனற்ற ஒரு அரசே தோற்றம் பெறும். அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.
சிறி லங்கா சுதந்திர கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான பரந்துப்பட்ட கூட்டணி வெற்றிப் பெறும் தருவாயிலே காணப்படுகின்றது. சுதந்திர கட்சியினர் கட்சி ரீதியில் எம்முடன் இணையாவிடினும், பெரும்பாலானோர் தனிப்பட்ட முறையில் பொதுமக்கள் முன்னணியுடன் கைக் கோர்த்து விட்டார்கள். அதுவே கூட்டணிக்கான முதல் வெற்றியாகும் - என்றார். (எ-22, 31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கோத்தபாயவைக் காப்பாற்றிய சக அரச தலைவர் வேட்பாளர்கள்

அரசதலைவர் தேர்தல் திருவிழா களைகட்ட ஆரம்பித்து விட்டது. வேட்புமனு நாளில் மாத்திரம் 96 தேர்தல் வன்முறைகள் பதிவாகியதாகத் தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பான கபே தெரிவித்துள்ளது. இதுவரை 103 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தேர்தலில் வன்முறைகளுக்கு பஞ்சமிருக்காது.

நல்லாட்சி என்ற நாமம் பிடுங்கப்பட்டு இப்போது நடப்பது என்ன ஆட்சி என்றே தெரியாத சூழலிலும், அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன தாம் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதாலும், கோத்தபாயவை ஆதரிக்கும் நிலமையிலும் வன்முறைகள் இன்னமும் தலைவிரித்தாடத்தான் போகின்றன. மறுபுறம் ஆட்சியில் இருக்கின்ற தரப்பான ரணில் தலைமையிலான அரசின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவும் இதற்கு ஈடான தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடத்தான் போகின்றார். வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே, தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடாக அவர் தன்னை விளம்பரப்படுத்திவிட்டார். அரசநிதியில் தனக்கான விளம்பரத்தை அவர் செய்து கொண்டார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவது தொடர்பில் அவருடன் வேட்புமனுத் தாக்கல் செய்த எந்தவொரு வேட்பாளரும் ஆட்சேபனை எழுப்பவில்லை. கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமை கேள்விக்குறியாக்கப்பட்டிருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றிலும் ஆவணங்களுடன் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வேட்புமனுத் தாக்கலின் பின்னரான ஆட்சேபனைக் காலத்தில் எந்தவொரு சக வேட்பாளரும் ஆட்சேபனை எழுப்பவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு எதிராக மாத்திரமே ஆட்சேபனைகள் எழுப்பப்பட்ட நிலையில் அவை தேர்தல்கள் ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியத்துக்காக முழக்கமிடுபவர் போலக் காட்டிக் கொள்ளும் எம்.கே.சிவாஜிலிங்கம் கூட, கோத்தபாயவுக்கு எதிராக ஆட்சேபனை எழுப்பவில்லை. சிவாஜிலிங்கத்தின் இந்த மௌனம், இவர் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக மகிந்த தரப்பின் ஆசியுடன்தான் போட்டியிடுகின்றார் என்ற சந்தேகத்தை இன்னும் வலிதாக்கவே செய்கின்றது.

2010ஆம் ஆண்டுக்கான அரச தலைவர் தேர்தலிலும், தமிழ் மக்கள் ஓரணியில் திரளவேண்டும் என்ற கோசம் வலுப்பெற்றிருந்தபோது, எம்.கே.சிவாஜிலிங்கம், கூட்டமைப்பினது முடிவுக்கு மாறாக அரச தலைவர் வேட்பாளராக தன்னிச்சையாகப் போட்டியிட்டிருந்தார். அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் கோரிக்கைக்கு அமைவாகவே அவர் அவ்வாறு போட்டியிட்டார் ஏன்ற விமர்சனமும் அப்போது எழுந்திருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், தற்போதும் சிவாஜிலிங்கம் கட்சியின் முடிவை மீறி தன்னிச்சையாகத் தேர்தலில் குதித்துள்ளார். இது தொடர்பான விமர்சனங்கள் ஒருபுறம் இருக்க, கோத்தபாயவுக்கு எதிராக ஆட்சேபனை எழுப்புவதற்கான சந்தர்ப்பம் தாராளமாக இருந்தும், அவர் ஆட்சேபனை நேரத்தில் மௌனம் காத்தமை பல்வேறு சந்தேகங்களையே ஏற்படுத்துகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், என்ன காரணத்துக்காக கோத்தாவின் குடியுரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தோம் என்று நீதியரசர்கள் அறிவிக்கவில்லை. அதே விடயத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஆட்சேபனைக் காலத்தில் யாராவது எழுப்பினால், உயர் நீதிமன்றத்தின் முடிவை தேர்தல்கள் ஆணைக்குழு குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளும் என்று கூட முற்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையிலாவது, கோத்தாவின் குடியுரிமையைச் சவாலுக்குஉட்படுத்தியிருக்கலாம். சிவாஜிலிங்கம் மாத்திரம் அல்ல சஜித் பிரேமதாச உள்ளிட்ட சக வேட்பாளர்கள் 34 பேரும் மௌனிகளாகவே இருந்துள்ளனர். கோத்தபாயவை இந்த விடயத்தில் ஆதரித்திருந்துள்ளனர் என்பதுதான் கசப்பான உண்மை.



# மதங்கள் மண்ணை சுரண்டுவது தகுமா?

உடுவிலூர் கலா

மதங்கள் யாவும் அன்பு ஒன்றையே போதிக்கின்றன. ஒவ்வொரு மதமும் அன்பின் வழியே ஆரம்பித்து அதன் வழியே செல்கின்றன. மனிதனை மனிதனாக வாழ வைக்க வேண்டிய மதங்கள் ஓர் இனத்தைத் துன்ப சாகரத்தில் தள்ளிவிட்டுள்ளதை ஏற்க முடியாது. உலக வரைபடத்தில் மிகச்சிறு புள்ளியாகத் தெரியும் எமது நாட்டில் வாழும் சிறுபான்மை இனம் தொடர்ந்து அனுபவிக்கும் துன்பங்கள் பட்டியலிட முடியாதவை.

இலங்கைத் தமிழருக்கு இலங்கைதான் சொந்த நாடு. இவர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் நம் வரலாறு தல்ல கீழாக ஆக்கப்படுவதால் தமிழர் வந்தேறுகுடிகளாவதா? மிகவும் கொடியவனான விஜயன், பெற்ற தந்தையைக் கொலைசெய்ய முற்பட்டவேளை அவனும் அவனது 700 தோழர்களும் கடல் வழியாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்கள். அவ்வேளை இயக்கர், நாகர் என இரு இனம் இங்கு இருந்ததாகவும் இயக்கர் குலப் பெண்ணான குவேனியை விஜயன் மணம் முடித்து அன்றைய குமரக்கோட்டம் எனப்படும் இன்றைய கதிர்காமத்தில் ஒளித்திருந்ததாகவும் வரலாறு மிகத் தெளிவாகக் கூறுகிறது. விஜயன் என்பவனே சிங்கள இனத்தின் வித்து என்று சொல்லப்படுகிறான். அப்படியானால் யார் வந்தேறுகுடிகள்?

### புத்தர் போதித்ததென்ன

பிணி, மூப்பு, சாக்காடு என்கிற மூன்று நிலைகளைக் கண்ணாரக் கண்டு உலக ஆசைகளை விடுத்து நிலையாமையை உணர்ந்து சமாதியடைந்தவர் புத்தபிரான். ஆனால் அவரின் வழித்தோன்றல்கள் இந்த நாட்டைப் பௌத்த நாடாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். வகை தொகையில்லா உயிர்களைக் கொன்று குவித்துள்ளனர். ஏராளமான குடும்பங்களைச் சிதைத்து காணாமல் ஆக்கப்பட்டோரை உருவாக்கியுள்ளனர். போதைப் பொருள்களால் எம்மினச் சிறுவர் மாணவர்களை வதை செய்கின்றனர். அப்பாவிப் பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாக வழி அமைத்துள்ளனர். இவ்வளவும் போதாதென்று நில அபகரிப்பில் அயராது உழைக்கின்றனர். தமிழரின் பாரம்பரிய மரபுரிமையான நிலங்களில் பௌத்த விதைகளை விதைக்க முனைப்போடு செயற்படுகின்றனர். அரச மரங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் புத்தரைக் குடியேற்றி பிக்குகளின் பிணங்களையும் எரியூட்டுகின்றனர். தடுப்போர் மீது அடாவடித்தனத்தை மேற்கொள்கின்றனர். சிங்கள இனவாதம் காத்திரமான இயங்கு நிலையில் இன அழிப்பைச் செய்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் தமிழர் குடியிருப்பு நிலங்களில் சிங்களக் குடியேற்றம் தாராளமாய்விடும். இந்துக் கடவுளருக்கான இடத்தை எங்கே கண்டுபிடிப்பது? இப்படியான நாசகார வேலையை சிங்களப் பிரதேசங்களில் நாம் செய்யமுடியுமா? தமிழர் பிரதேசங்களில் புத்தரைக் குடியேற்றுவதுபோல் சிங்களப் பிரதேசங்களில் இந்து சமயக்கடவுளரைக் குடியேற்ற முடியுமா?.

### இலங்கையின் சட்டம் என்ன சொல்கின்றது?

இந்த நாட்டின் சட்டம் எல்லோருக்கும் சமமானதே. நீதிமன்ற உத்தரவைமீறி பிக்குகளை மரபுரிமை சார்ந்த இந்துக் கோயில் நிலங்களில் எரியூட்டுவது இழிவான செயல் மட்டுமல்ல புத்தத்துவத்தையே அசிங்கப்படுத்துவதற்குச் சமமானது. பூசகர், சட்டத்தரணி போன்றோரும் தாக்கப்பட்டுள்ளனர். இது இனவாதம் மட்டுமல்ல மனித உரிமை மீறலும் கூட. ஜனநாயக நாடு எனச் சொல்லப்படும் எமது நாட்டில் மேன்மைச் சக்தியானது சட்டத்தைத் தூக்கியெறிந்து இப்படிச் செய்துள்ளது. இதற்குச் சட்டத்தின் அடுத்த நடவடிக்கை என்ன? நல்லிணக்க அரசு என அரியணை அமர்ந்த அரச தலைவரின் தீர்ப்பு என்ன? புத்த பெருமானை வணங்கும் பிக்குகளின் செயற்பாடும் இனவெறியர்களின் நாசகாரச் செயல்களும் தமிழினத்தைக் கலங்கச் செய்துள்ளன. பிக்குகளை தகனம் செய்ய இடமேயில்லையா? அப்படியானால் ஆங்காங்குள்ள சுடுகாடுகளில் எரியூட்டியிருக்கலாமே.

ஜனநாயகம் எங்கே? நல்லிணக்கம் எங்கே? நிலைமாறுகாலநீதி எங்கே? எதுவுமே தமிழருக்கு இல்லையா? சமாதானத்தின் முகவரியைத் தேடிக்கொண்டிருந்த ஒவ்வொரு தமிழனுக்கும் நல்லிணக்க ஆட்சி மேல் நம்பிக்கை இருந்தது. ஆனால் ஆங்காங்கு முளைக்கும் புத்தர் சிலைகளும், பிக்குகளின் எரியூட்டல் நிகழ்வுகளும் தமிழினத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளன. அடுத்து எங்கே பௌத்தம் நிலை கொள்ளப் போகிறது? எந்தப் பிக்குவை எந்த ஆலய நிலத்தில் எரியூட்டப் போகிறார்கள் என்ற எண்ணவோட்டங்களே தற்போது வலுவாக எழுகின்றன.

### தமிழர்களிடத்தில் ஒற்றுமை பேணப்படுதல் மிகஅவசியம்

பிரதேசத்தின் ஒவ்வொரு குழிநிலத்தையும் சிங்களம் ஆக்கிரமித்துக் கொள்ளாமல் பாதுகாக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள், மதத் தலைவர்கள் யாவரும் கைகோர்த்து நின்று எம்பிரதேசத்தைக் காப்பாற்ற முனைப்புடன் செயற்பட வேண்டும். மனிதருக்கும் மாக்களுக்கும் மன்னிப்பையும் சமாதானத்தையும் வழங்க வேண்டிய பேராயர் ரஞ்சித் மல்கம் ஆண்டகை இலங்கை பௌத்தநாடு என பிரிவினை வாதத்தை வலியுறுத்தியுள்ளார். பன்னாட்டுச் சமூகம் எம்மவர் நிலையையும் பெரும்பான்மையினரின் அடாவடிகளையும் கண்டும் காணாதுள்ளது. இந்த இன மதவாதத்துக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். தமிழர் இலங்கை நாட்டின் குடிகள் என்பதை இடித்துரைத்து தமிழினம் நின்மதியாய் வாழ உண்மையுடன் கூடிய பாதுகாப்பை வழங்கவேண்டும். புலம் பெயர் உறவுகளும் இந்தப் போராட்டத்துக்குக் கைகோர்த்து இணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தலைவர் தேர்தலில் தமிழர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதே சிறந்தது

■ இந்துமதி

அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை எடுத்துச் செயற்பட வேண்டியமை தொடர்பாக பல்வேறு துறைகளையும் சார்ந்தவர்களை உள்ளடக்கிய சுயாதீனக் குழுவொன்று அரசியல் கட்சிகளுடன் அவசர சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

இன்றுள்ள நிலையில் அரச தலைவர் தேர்தல் தொடர்பாகத் தமிழ் மக்கள் மூன்று முடிவுகளை மேற்கொள்ள முடியும். இதில் முதலாவது தேர்தலில் வாக்களிக்காது விடுவதாகும். ஆனால் தமது முக்கியமான ஜனநாயகக் கடமையைத் தமிழர்கள் புறக்கணித்துவிடுதல் சரியானதல்ல. கடந்த 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலிலும் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டனர். இதன் விளைவாகவே மகிந்த ராஜபக்சவினால் வெற்றியைத் தொட முடிந்தது. இதனால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளைத் தமிழர்கள் நன்றாகவே அனுபவித்துவிட்டார்கள். தற்போது ஐக்கிய தேசியக்கட்சியும் மகிந்த தரப்பும் அரசதலைவர் தேர்தலில் மோதிக்கொள்ளப்போகின்றமை ஓரளவு உறுதியாகிவிட்டது. இதில் வெல்லப்போவது யார் என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும்.




> சஜித் பிரேமதாசவும் கோத்தபாயவும் முக்கியமான வேட்பாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். இவர்களில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். அதற்குரிய கல்வியறிவும் அரசியல் ரீதியான விழிப்புணர்வும் அவர்களிடம் நிறையவே காணப்படுகின்றன.

**வாக்களிக்க வேண்டியது தமிழர் தரப்புக்கு அவசியம்**

இதில் தமிழர்கள் அக்கறை காட்ட வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வியும் தானாகவே எழுகின்றது. தேர்ந்தெடுக்கப்படப்போகும் அரச தலைவர் முழு நாட்டுக்குமே உரியவராகின்றார். தமிழர்களுக்கும் அவர்தான் அரச தலைவராகிறார். தமது பிரச்சினைகள் தொடர்பாக அரச தலைவருடன் பேச வேண்டிய தேவையும் தமிழர்களுக்கு உள்ளது. ஆகவே வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்துவிட்டு அவரிடம் உதவிகோரிச் செல்வது எந்த வகையிலும் நியாயமானதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாது வாக்களிக்காது ஒதுங்கி விடுதவன் மூலமாகத் தமிழர்களுக்கு வேண்டாத ஒருவர் தேர்தலில் வெற்றியடையக் கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுவிடும். ஆகவே இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமானால் தமிழர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தியே ஆக வேண்டும்.

இரண்டாவதாக இந்தத் தேர்தலில் முதன்மை வேட்பாளர்களாக விளங்குபவர்கள் சிங்களவர்களே என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். சிங்களவர் தவிர்ந்த வேறு இனத்தவர்களால் தேர்தலில் வெற்றியைப் பெறவும் முடியாது. ஏனென்றால் சிங்களவர்களால்தான் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறமுடியும். தற்போதுள்ள நிலையில் சஜித் பிரேமதாசவும் கோத்தபாயவும் முக்கியமான வேட்பாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். இவர்களில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். அதற்குரிய கல்வியறிவும் அரசியல் ரீதியான விழிப்புணர்வும் அவர்களிடம் நிறையவே காணப்படுகின்றன. கடந்த தேர்தலிலும் சம்பந்தன் கூறாதுவிட்டாலும் தமிழ் மக்கள் மைத்திரிக்குத்தான் வாக்களித்திருப்பார்கள். மகிந்தவுக்கு அவர்களின் வாக்குகள் கிடைத்திருக்கவே மாட்டாது. இந்த நிலையில் தமிழ் மக்கள் தாம் விரும்பியவாறு வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

சஜித் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் தமது ஆதரவு அவருக்கே உண்டெனக் கூறிய மைத்திரிபால கோத்தபாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். அவரது கட்சியினரே அவரது முடிவை ஏற்கவில்லை. கட்சிக்குள் பெரும் குழப்ப நிலை தோன்றியுள்ளது. சிங்கள அரசியல்வாதிகள் நேரத்துக்கு நேரம் தமது முடிவுகளை மாற்றிக்கொள்வது வழக்கமாகும். இதையெல்லாம் தமிழர்கள் கவனத்தில்கொள்ளத் தேவையில்லை. இதேவேளை நாட்டின் நடவடிக்கைகளில் இருந்து அவர்கள் ஒதுங்கியிருக்க முடியாது. தமிழர்களில் எவராவது அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டால் அத்தகையவர்களை ஆதரிப்பது தமிழ் வாக்காளர்களின் மூன்றாவது தெரிவாகும். இதனால் தமிழர்களுக்கு வேண்டாத சிலரே நன்மையடைவார்கள். ஆகவே இத்தகைய முடிவு உகந்ததொன்றாகக் காணப்படவில்லை. தமிழர் ஒருவர் தேர்தலில் வெற்றிபெற முடியாத நிலையில் அவருக்கு வாக்குகளை அளித்து விருப்ப மில்லாத ஒருவரின் வெற்றிக்கு உதவுவது புத்தி சாலித்தனமாகத் தெரியவில்லை. ஆகவே தமிழ் அரசியல்வாதிகளும் வேறு தரப்பினரும் அரச தலைவர் தேர்தலில் மக்கள் வாக்களிப்பது தொடர்பாக அழுத்தங்களைப் பயன்படுத்தக் கூடாது. மக்கள் தமது எண்ணம்போன்று வாக்களித்து விடுவதை அனுமதிப்பதே சிறந்ததாகும்.



## ஆசிரியருக்கான கடிதம்

# மிளகாய் அரைக்கும் படலம் ஆரம்பம்

அரச தலைவர் தேர்தல் நெருங்குகின்றது. இனி வீரவசனங்களும் வெறும் உறுதி மொழிகளும் அள்ளி வீசப்படுவதோடு தமிழர் தலைகளில் மிளகாய் அரைக்கும் வேலைக்கும் பஞ்சமிருக்காது. 1987ஆம் ஆண்டில் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று கொக்கரித்த பேரினவாதி ஜெ.ஆர்.ஜெயவர்த்தன தொடக்கம் இன்று பதவியில் இருக்கும் மைத்திரிபால வரை எவருமே தமிழர்களுக்கு உரித்தான, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைத் தரவில்லை. நீதித்துறை கூட பௌத்த பேரினவாதிகளால் தற்போது தகர்தெறியப்பட்டுள்ளது. காணாமல் போன உறவுகளின் குடும்பங்கள் வருடக் கணக்கில் போராடியும் தமிழ் தலைவர்களால் எதுவுமே செய்யவோ பதிலளிக்கவோ முடியாத பெட்டிப் பாம்பாக இருக்கின்றனர். இவர்களால் எப்படி தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத்தர முடியும்? மீண்டும் பௌத்த பேரினவாத அரசுக்கு முண்டுகொடுத்து தமிழ் மக்களை ஏமாற்றுவதை தவிர வேறேதுமில்லை?. இறுதியில் தந்தை செல்வநாயகம் கூறியதுபோல் தமிழ் மக்களை அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

*அ.அன்பு, வரணி*

---

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை [illegible] வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்த [illegible] வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக் கிழங்கு விதைத்தொகை கோரிக்கை வரலாற்றை மாற்றுமா?

*யாழ்ப்பாணம், ஒக். 9*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கையாளர்களின் விதை உருளைக் கிழங்குக் கோரிக்கை வரலாற்றை மாற்றும் விதத்தில் அமைந்துள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.*

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கு அரசு அரை மானியம் வழங்குகிறது. ஒரு பெட்டி விதை உருளைக் கிழங்கின் மொத்த விலையில் அரைவாசியை விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. இந்த வருடம் சுமார் 280 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதற்கு அரசதலைவர் செயலகம், விவசாய அமைச்சு 47 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. இந்த மாத இறுதியில் 'சசி' இன விதை உருளைக் கிழங்குகள் வழங்கக் கூடியதாக இருக்கும்.

அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு அமைவாகவே விதை உருளைக் கிழங்கைக் கொள்வனவு செய்து வழங்க முடியும்.

ஆனால் இந்த முறை சுமார் 930 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு அரைமானிய விலையில் வேண்டும் என்று தெரிவித்து விவசாயிகள் கோரிக்கை தந்துள்ளனர். அரசின் நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப 230 தொடக்கம் 280 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கே எங்களால் வழங்க முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் 1986 ஆம் ஆண்டளவில் ஆகக் கூடியதாக 300 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு பயிரிட்ட வரலாறே உள்ளது. ஆகவே கிடைக்கும் நிதிக்கு ஏற்ப சுமார் 280 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கே இந்தமுறை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)



அளவெட்டி,ஒக்.9

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி கண்ணகை அம்மன் வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக 10 லட்சம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-63)

## கடலாமை இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது

யாழ்ப்பாணம்,ஒக் 9

கடலாமை இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

கடற்படையினர் நெடுந்தீவு, மனலடிப் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது வீடொன்றில் கடலாமை இறைச்சியை மறைத்து வைத்திருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 16 கிலோ கிராம் கடலாமை இறைச்சியை மீட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள், 24, 57, 60 மற்றும் 66 வயதுடைய குறித்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் நெடுந்தீவு பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## வெவ்வேறு விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி நால்வர் காயமடைந்தனர்.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் வீதி வளைவில் திரும்பிய முச்சக்கரவண்டி எதிரே வந்த ஈருருளியுடன்மோதிவிபத்துக்குள்ளானது. இதில் முச்சக்கர வண்டியில் பயணித்த சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த பெண்ணும், ஈருருளியில் பயணித்த சரசாலையைச் சேர்ந்த முதியவரும் காயமடைந்தனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சரசாலைத் தெற்கைச் சேர்ந்த 57 வயது குடும்பத்தலைவரும், சங்கத்தானையைச் சேர்ந்த 22 வயதுடைய பெண்ணும் காயமடைந்தனர். காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர் (ஐ-9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்ப்பாணக்குடாநாட்டில் பொருள்களை விநியோகிக்கும் வர்த்தகத்தில் ஈடுபடும் விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அவசரக்கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு இல.165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெறும். கலந்துரையாடலில் சகல விநியோகஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (க-9)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.9

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் இடம்பெறும். கல்லூரி அதிபர் சி. திரிகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக கொழும்பு பல் மருத்துவ நிபுணர் மருத்துவர் பொ.சுபாகரன், மதிப்புறு விருந்தினராக கனடா பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர் அருண் செல்லப்பா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

*சுவரொட்டி ஒட்டும் விவகாரத்தில்*

# கோத்தபாயவின் ஆதரவாளர்கள் சபை உறுப்பினருக்கு மிரட்டல்

தேர்தல் விதிமுறைகளை மீறி தனது வீட்டு மதிலில் சுவரொட்டிகளை ஒட்ட வேண்டாம் என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் தடுத்தார். அதனால் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாயவின் ஆதரவாளர்கள் உறுப்பினரை மிரட்டியுள்ளனர். அதுமட்டுமன்றி நள்ளிரவில் அவருடைய வீட்டு மதிலில் சுவரொட்டிகளை ஒட்டிச்சென்றுள்ளனர்.

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் த.ரஜீவின் ஆதரவாளர்களே அடாவடியில் ஈடுபட்டனர் என்றும் அவர்கள் 50 5048 எனும் இலக்கமுடைய வெள்ளை நிற ஹயஸ் ரக வாகனத்தில் வந்தே சுவரொட்டிகளை ஒட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுறுத்தலுக்குள்ளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் சுவரொட்டிகளை நேற்றுமுன்தினம் அவருடைய ஆதரவாளர்கள் நல்லூர் பருத்தித்துறை வீதியிலுள்ள வீட்டு மதில்களில் ஒட்டிவந்தனர். அதன் தொடர்ச்சியாக எனது வீட்டுச் சுவரிலும் ஒட்ட முற்பட்டனர். அதை நான் எதிர்த்தேன்.

யாரிடம் கேட்டு என் வீட்டு மதிலில் ஒட்டுகின்றீர்கள் என்று நான் கேட்டதற்கு அவர்கள் "யாரிடம் கேட்க வேண்டும்" என்று மிரட்டல் தொனியுடன் மிரட்டினர். சுவரொட்டிகளையும் அதிகாரத்துடனும் மிரட்டல் பாணியுடனும் மீண்டும் ஒட்டுவதற்கு முயற்சித்தனர்.

இருப்பினும், அதற்கு நான் அனுமதி வழங்கவில்லை. அது பெரும் வாய்த்தர்க்கமாக மாற அவர்கள் சுவரொட்டிகளை ஒட்டாமல் சென்றிருந்தனர்.

ஆனால் நேற்றுக்காலை பார்த்தபோது எனது வீட்டுச் சுவர் [illegible] மன்றி வீட்டுக் கேற்றிலும் சுவரொட்டிகள்




ஒட்டப்பட்டுள்ளன. சுவரொட்டிகளை எனது வீட்டு மதிலில் ஒட்ட வேண்டாம் என்று நான் அவர்களுக்கு மரியாதையாகத்தான் கூறினேன். ஆனால் அவர்கள் அதிகார வெறியுடன் செய்து காட்டுவோம் என்ற மிரட்டல் பாணியில் யாருமில்லாத பின்னிரவில் வந்து சுவரொட்டிகளை ஒட்டிச் சென்றுள்ளனர்.

முன்னர் நடைபெற்றதுபோன்று, அதிகார வெறியுடனான கொடுங்கோல் ஆட்சிமுறையைத்தான் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் கொண்டு வருவோம் என்ற செய்தியைத்தான் அவர்கள் இத்தகைய செயல்கள் மூலமாக வெளிப்படுத்துகின்றனரா? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

"பார்த்தீபனுடைய வீட்டு மதிலில் ஆரம்பத்தில் போஸ்ரர் ஒட்டப்படவில்லை. அருகில் உள்ள பகுதிகளில் ஒட்டிய போது பார்த்தீபன் ஆதரவாளர்களுடன் முரண்பட்டார். இது தொடர்பில் ஆதரவாளர்கள் என்னுடன் பேசினார்கள். பிரச்சினை வேண்டாம் அங்கிருந்து அகலுங்கள் என்று கூறினேன். அதன்படி அவர்கள் சென்றுவிட்டார்கள். காலையில் முகப்புத்தகத்தைப் பார்த்து தான் பார்த்தீபனின் வீட்டு மதலில் போஸ்ரர் ஒட்டப்பட்டிருந்ததை நான் அறிந்தேன். ஆதரவாளர்கள் தான் அதை ஒட்டியுள்ளனர். ஒட்டாத போஸ்ரருக்கு முரண்பட்டதன் காரணமாகவே அவர்கள் அந்தப் போஸ்ரர்களைப் பின்னர் ஒட்டியுள்ளனர். எனினும் அது அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது" என்று பொதுமக்கள் [illegible] முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் த. ரஜீவன் தெரிவித்தார். (த-37)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஒக். 9

ஆயுர்வேத வைத்திய சபையின் நடமாடும் சேவை நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் கைதடி சித்தமருத்துவபோதனா பிரிவில் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கை அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நடமாடும் சேவை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆயுர் வேத மருத்துவ அலுவலர்கள், பதிவை எதிர்பார்த்திருப்பவர்கள் மற்றும் பரம்பரை மருத்துவர்கள் கலந்து கொண்டு பயன் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## கடையிற் சுவாமிகளின் 128 ஆவது குருபூசை

யாழ்ப்பாணம்,ஒக்.9

கடையிற் சுவாமிகளின் 128 ஆவது குருபூசைத் திருநாள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி வீதியிலுள்ள சிறிவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் ஆலயத்தில் நடைபெறும். அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு கடையிற்சுவாமிகள் பற்றிய சொற்பொழிவும், மகேஸ்வர பூசையும் இடம் பெறும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடி விகாரைக்கு புதிய விகாராதிபதி

முல்லைத்தீவு, ஒக். 9

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்குப் புதிய விகாராதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



திருகோணமலை மிகிந்தபுரத்தைச் சேர்ந்த பௌத்த மதகுரு அமரபுர நிக்கா என்று பௌத்த மதப் பிரிவைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

நீராவியடிபிள்ளையார் ஆலயத்தை அபகரித்து குருகந்த றாஜமகா விகாரை அமைக்கப்பட்டு அந்த விகாரையில் கொழும்பு மேதாலங்கார கீர்த்தி என்ற பௌத்த மதகுரு வழிபாடுகளை மேற்கொண்டு வந்தார். இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி குறித்த பிக்கு உயிரிழந்த நிலையில் அவரின் இடத்துக்குப் புதிதாக பௌத்த மதகுரு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை குறித்த விகாரைக்கு வருகை தரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ- ரி3)

## ஆறு மயானங்களின் எரிகொட்டகைக்கு நிதி

மாகாண உள்ளூராட்சி அமைச்சு சாவகச்சேரி பிரதேச சபை ஆளுகை எல்லைக்குட்பட்ட பகுதியில் எரிகொட்டகை அமைப்பதற்கு 6 மயானங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 17 மயானங்களுக்கு எரிகொட்டகை அமைப்பதற்குக் கோரிக்கை விடப்பட்டது. தற்போது 6 மயானங்களுக்கு எரிகொட்டகை அமைப்பதற்காக 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை வடக்கு ஆலடி இந்து மயானம், கைதடி மேற்கு கல்லாகம் இந்து மயானம், கச்சாய் எறியால் பிட்டி, விடத்தற்பளை சம்பாவளி, ஜே 344 சாலம்பைப் பிட்டி கொடுக்குமாலை, ஜே 315 சந்திரபுரம் ஆகிய மயானங்களுக்கே எரிகொட்டகை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (து-159)

## வவுனியா நகர மலகூடம் துர்நாற்றம் வீசுகின்றது

வவுனியா, ஒக். 9

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியிலுள்ள நகரசபைப் பொது மலசலகூடத்திலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. மழை காரணமாக வெள்ளத்துடன் மலசலகூடக் கழிவுகள் வெளியேறிவருகின்றன என்று பயணிகளும் அந்தப் பகுதியிலுள்ள வர்த்தகரும் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரசபையினர் கேள்விகோரல் ஊடாக தனியாருக்குஒப்பந்தஅடிப்படையில்வழங்கப்பட்டுள்ள பொது மலசலகூடமே துர்நாற்றம் வீசுகின்றது.

பொது மலசலகூடத்துக்குச் செல்பவர்களிடம் இருபது ரூபா அறவிடப்படுகின்றபோதிலும் அந்தப் பணத்துக்கான தகுதிகள் தராதரமின்றியுள்ளன. பொது மலசலகூடம் காணப்படுகின்றது. நாள் ஒன்றுக்கு ஒருமுறையே சுத்தப்படுத்தப்படுகின்றது. தற்போது பெய்துவரும் பருவ மழை காணரமாக மலசலகூடத்திலிருந்து கழிவுகள் மழை நீருடன் வெளியேறிவருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயத்தில் நகர சபையினர் அதிக கவனம் எடுப்பதிலிருந்து தவறியுள்ளனர். மலசலகூடத்துக்குள் மருந்துப் பொருள்கள் எவையும் பயன்படுத்துவதில்லை இதனால் கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

குற்றச்சாட்டுக்கள் குறித்து நகரசபை உப நகரபிதா சு. குமாரசாமியிடம் கேட்டபோது.

நகரசபை ஊழியருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மலசலகூடத்தை உடன் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நேரில் சென்றும் அவதானிக்கப்படும். என்று தெரிவித்துள்ளார். (து)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், ஒக். 9

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கைதடி தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா. சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)



## குருதிக்கொடை நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 9



பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நினைவாக குருதிக்கொடை நிகழ்வொன்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி பழைய மருத்துவமனை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 2015 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் அனுசரனையில் உலக சுகாதார மருத்துவ நலச் சங்கத்தின் நிதி பங்களிப்பிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 86 பேர் குருதிக்கொடை வழங்கினர்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, கிளிநொச்சி கல்விவலய முன்னால் பணிப்பாளர் முருகவேள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் குருதி க்கொடையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## வேம்பிராய் மயானப் பகுதியில் இனந்தெரியாத குழு வழிப்பறி

### பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்

சாவகச்சேரி, ஒக். 9

தென்மராட்சி மீசாலை வடக்கு வேம்பிராயில் உந்துருளி மற்றும் ஈருருளிகளில் செல்வோரை வழிமறிக்கும் கும்பல் அவர்களைத் தாக்கி பணம் மற்றும் உடைமைகளை அபகரித்துவருகின்றது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீசாலை புத்தூர் சந்தியிலிருந்து சரசாலை கனகன்புளியடிச் சந்திக்குச் செல்லும் வீதியில் வேம்பிராய் மயானத்துக்கு முன்பாகவுள்ள பற்றைகளுக்குள் மறைந்திருக்கும் இனந்தெரியாதோர் அந்த வழியே செல்லும் அப்பாவி மக்களை வழிமறித்துத் தாக்கி பணம் பறிக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கின்றனர். இதற்குப் பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-9)

## சமுர்த்தி உரிமம் வழங்கியும் நிதி வழங்கப்படவேயில்லை

கிளிநொச்சி, ஒக். 9

சமுர்த்தி உதவி உரித்துப் படிவம் வழங்கப்பட்டு 4 மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரை சமுர்த்திப் பணம் வழங்கப்படவில்லை என்று சில கிராமங்களின் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மே மாதம் ஆரம்ப கைத்தொழில் [illegible] கமகே கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்து மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மரக்கன்றுகளுடன் சமுர்த்தி உதவி உரித்துப்படிவம் வழங்கியிருந்தார்.

நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சில கிராமங்களில் இதுவரை அதற்கான பணம் வழங்கப்படவில்லை என்று பணம் கிடைக்காத மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் [illegible] தாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம் என்றும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளரிடம் கேட்டபோது, மாதாந்தத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு சில கிராமங்களில் வழங்கப்படாது காணப்படுகின்றது. அதனை இன்று வழங்குவதற்கான நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது" என்றுதெரிவித்தார். (து-6)

## மன்னார் மாவட்ட பதில் செயலராக அருமைநாயகம் கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

மன்னார் மாவட்டத்துக்குப் பதில் மாவட்டச் செயலராக தற்போதைய கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. அருமைநாயகம் பணியாற்றவுள்ளார். இதற்கான அனுமதியை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர் மோகன்ராஜ் புலமைப் பரிசில் மூலமான ஒரு பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளார்.

இந்நிலையில் மன்னார் மாவட்டச் செயலராக பதில் கடமையாற்ற கிளிநொச்சி மாவட்டச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 7 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையே இவ்வாறு பதில் நியமன அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேநேரம் மன்னார் மாவட்டத்தின் மேலதிக செயலர் குணபாலன் ஏற்கனவே விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளார். (ஐ-105)

## உரமானிய பதிவுகள் நாளை

சாவகச்சேரி ஒக். 9

சாவகச்சேரி நகர் கமக்கார அமைப்புக்குட்பட்ட பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக் கான உரமானியப் பதிவுகள் நாளை இடம்பெறவுள்ளன.

மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் இந்தப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

அமைப்பின் அங்கத்தவர்கள் தமது இந்த வருடத்துக்கான அங்கத்துவப் பற்றுச்சீட்டு, ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, காணியின் உறுதிப் பத்திரம் மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் உ. பரமநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி, அக்கராயனில் நடமாடும் சேவைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்துகின்றது

யாழ்ப்பாணம், ஒக். 9

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம் கிளிநொச்சியின் பூநகரி மற்றும் அக்கராயனில் மனித உரிமைகள் தொடர்பான நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பூநகரி இரணைதீவிலும் மறுநாள் சனிக்கிழமை கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியால யத்திலும் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்துக்கு அமைவாக அமைக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமைக் காரியாலயம் உட்பட 10 பிராந்திய அலுவலகங்களையும், 4 உப அலுவலகங்களையும்கொண்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சேவையை சகல பகுதிகளுக்கும்விஸ்தரிக்கும் நோக்குடனும், ஏனைய நிறுவனங்களின் சேவைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்குடனும் முறைப்பாடுகள் மேற்கொள்வதில் மக்களுக்கு இலகுபடுத்தும் நோக்குடனும் நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பின்வரும் அரச நிறுவனங்களை அழைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கரைச்சிப் பிரதேச செயலகத்தின் செயலர், காணி பிரிவு அதிகாரி, பெண்கள் அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி திணைக்களம், வடக்கு மாகாண காணி ஆணையாளர், பிரதேச சபை, கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர், கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் நிலையம், கிளிநொச்சி தொழில் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை அதிகாரி, சட்ட உதவி ஆணைக்குழு ஆகிய தரப்புக்கலந்துகொள்ளும் என்று ஆணைக்குழுவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# 'முதியோர்' என்பதற்குப் பதிலாக 'மூத்த ஆலோசகர்' எனக்கூறவும்

*வடக்கு ஆளுநர் இப்படிக் கூறுகின்றார்*

கொடிகாமம், ஒக். 9

மனித உரிமைகள்கூட தற்போது வரையறுக்கப்பட்டுள்ளன. சிறார்களின் உரிமை, பெண் உரிமை என்ற வரிசையில் சேர்க்க வேண்டிய மற்றொன்று முதியோர் உரிமை. ஏனெனில் முதியோருக்கு உரிமைகள் உள்ளன. முதியோர் என்ற சொல்லை மாற்றி மூத்த ஆலோசகர் என்று சொல்ல வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.



பன்னாட்டு முதியோர் வார நிகழ்வுகள் கைதடி முதியோர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு சமுதாயம் கடந்து செல்லும்போது அந்தச் சமுதாயத்தின் ஞாபகார்த்தங்கள், வேதனைகளைத் தங்கள் வாழ்வினூடாக அனுபவமாகக் கொண்டவர்கள் அவர்கள். மூத்த ஆலோசகர்கள் நாங்கள். இனிமேல் மூத்த ஆலோசகர்கள் என்றுதான் அழைக்க வேண்டும். மூத்த ஆலோசகர்கள் ஒரு காலத்தில் சமுதாயத்தில் அந்திநேரத்தில் ஒரு இடத்தில் இருப்பது வழக்கம். அவர்கள் ஒரு இடத்தில் இருந்தாலும் உலகத்தைக் கொண்டு வர முடியும். ஆகையால் மூத்த ஆலோசகர் இல்லத்துக்கு நான் சொல்ல வேண்டியது உலகத்தைத் தொடுவதற்கான புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி ஸ்கைப், வட்சப் என்பவற்றை அறிய வேண்டும். அவர்கள் தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளும் நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும். இதை அடுத்த வருடம் உங்கள் திட்டமிடலில் கொண்டு வர வேண்டும் என்பது எனது விருப்பம்.

இங்கே இருக்கும் 104 மூத்த ஆலோசகர்களுடன் மொத்தமாக 220 மூத்த ஆலோசகர்கள் இருக்கிறார்கள்.

நான் தேடிப் பார்த்த அளவில் இங்கே சொல்லக் கூடிய வகையில் ஒரு குறைபாடுகளில்லை. இலங்கையின் தரப்படுத்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளீர்கள். மனதார வாழ்த்துகிறேன். இங்கு இருப்பவர்கள் வேறு ஒருவரின் தாய் தந்தை என்று நினைக்காமல் சமுதாயத்தை வளர்க்க வேண்டும்.

இங்கே இருக்கும் தாய், தந்தையருடைய விருப்பத்துக்கேற்ப அவர்களோடு பழகி நண்பர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள வையுங்கள். நானும் ஒரு மூத்த ஆலோசகர் தான். நான் ஆளுநராகப் பதவியேற்று எட்டு மாத கால அனுபவத்திலே எனக்கு ஒரு ஓய்வு இல்லம் கிடைக்குமாக இருந்தால் வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு ஓய்வு இடத்துக்குத்தான் வருவேன். இங்கு இருக்கும் காற்று, மண், நதிஓடமும் வயலும் எங்கள் இதிகாசம். இது எங்கள் அரசியல், எங்கள் காட்சி. இது தான் எங்கள் வாழ்க்கை. - என்றார். (த-159,131)

## பாதீடு தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம் ஒக் 9

சாவகச்சேரி பிரதேச சபையின் பாதீடு தயாரிப்பதற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிப்பது தொடர்பாகவே இதன் போது கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ-159)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக்.9

நவாலி மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர்தின உரையும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

நவாலி மகாவித்தியாலயத்தை உருவாக்கிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் - பண்டிதர் தம்பையா ஆகியோரை நினைவு கூர்ந்து ஓய்வு நிலை வர்த்தக வங்கி மூத்த முகாமையாளர் எஸ்.ரவீந்திரா நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

நிகழ்வில் சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவருக்கு தேவா - சுலோசனா ஞாபகார்த்த நிதியம் சார்பில் ஈருருளியும், ஏனைய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணானந்தா தலைமையில் நடைபெறும்நிகழ்வில், முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண முதன்மை உள்ளகக் கணக்காய்வாளரும், சுலோசனா ஞாபகார்த்த நிதியத் தலைவருமான திருமதி சுரோஜினி சந்திரசேகரம், சாவக்ச்சேரி நீதி நிர்வாகப் பிரிவின் நன்னடத்தை நிலையப் பொறுப்பதிகாரி நாகராஜா செல்வேந்திரா ஆகியோரும் கலந்துகொள்வர். (க-50)

# போதைப்பொருள் வைத்திருந்தாரா முன்னாள் போராளிக்கு மறியல்

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் வசிக்கும் முன்னாள் போராளி ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி முன்னாள் போராளி ஒருவர் கைதுசெய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் வசிக்கும் வீட்டு வளாகத்தில் 4 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை மீட்டோம் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர். புளியங்குளம் சிறப்பு அதிரடிப்படையினர் கடந்த சனிக்கிழமை அவரைக் கைதுசெய்து கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர். பொலிஸார் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்தவருடம் கனகராயன்குளம் பகுதியில் உணவகம் நடத்தும் இஸ்லாமிய நபருக்கும், உணவகம்உள்ள காணியை குத்தகைக்கு வழங்கிய உரிமையாளர் என்று தெரிவிக்கும் முன்னாள் போராளிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துமுரண்பாட்டை அடுத்து கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த முன்னாள் போராளி மற்றும் அவருடைய குடும்பத்தினரைத் தாக்கியிருந்தார் என்று தெரிவித்து காணி உரிமையாளர் கிளிநொச்சி மருத்துவமனையிலும், அருடையது இரு பிள்ளைகளும் மாங்குளம் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றிருந்தனர்.

சம்பவம் அந்தப் பகுதியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. பொலிஸ் அதிகாரிக்கு எதிராகப் பொதுமக்கள் கனகராயன்குளத்தில் போராட்டம் நடத்தியிருந்தனர். இந்தநிலையிலேயே, குறித்த காணி உரிமையாளர் என்று தெரிவிக்கப்படும் முன்னாள் போராளி ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (த-110)

# ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய ஆசிரியர் தினவிழா இன்று புதன்கிமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வில் களபூமி மண்ணில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆறு பேர் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நவாலியூர் ஆ.குமரேசமூர்த்தி கலந்து கொள்வார். (க-50)

***

தென்மராட்சி.ஒக்.9

தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர் தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் பிற்பகல் 1.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி. அ.பிரேமசங்கர், சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வலயப் பாடசாலைகளில் அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி கடந்த ஒரு வருட காலத்தில் ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள் 43 பேர் வலயத்தால் விருது வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் முன்பள்ளிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய கலந்துகொண்டு அடிக்கல்லை நடுகை செய்தார். (ஐ)

# அரச அலுவலக சாரதிகளுக்கு உடற்தகுதி சோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு மாகாணத்தில் அரச அலுவலகங்களைச் சேர்ந்த சாரதிகளுக்கான உடற்தகுதி இலவச மருத்துவப் பரிசோதனை நேற்று ஆரம்பமானது.



வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி முதன்முறையாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.
வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்புச் சபையின் பிரதானியான மருத்துவ நிபுணர் கோபிசங்கர் தலைமையில் இலவச மருத்துவ பரிசோதனை நிகழ்வு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை வீதியிலுள்ள தாதியர் பயிற்சி கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. இந்தப் பரிசோதனை இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.
வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தை ஆளுநர் செயலகம், வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு சபை ஆகியன இணைந்து நடத்துகின்றன. இந்த வீதிப் பாதுகாப்பு வாரம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை இடம்பெற வுள்ளது. வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் பல் வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.
சாரதிகளுக்கான இலவச மருத்துவ பரிசோதனையில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்

# கிளிநொச்சி செஞ்சோலைக் காணியை ராணுவத்திடமிருந்து மீட்டது தாங்களே

## காணியின் பல வருட உரித்தாளர்கள் கூறுகின்றனர்

கிளிநொச்சி மலையாளபுரத்தில் முன்னர் செஞ்சோலை அமைந்திருந்த நிலத்தில் இராணுவத்தினர் குடியிருந்தபோது மனிதஉரிமை ஆணைக்குழுவின் ஊடாக சட்ட நடவடிக்கைக்குக் கொண்டுசென்றவர்கள் தாங்களே என்று அந்த நிலத்துக்கு பல வருடங்களாக உரிமைகோரும் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
மலையாளபுரத்தில் விடுதலைப் புலிகளின் காலத்தில் அந்தப் பகுதியில் செஞ்சோலை அமைக்கும் போது அந்த நிலத்தின் உரிமையாளர்களில் ஒருசிலரே நாட்டில் இருந்தனர். அவ்வாறு இருந்தவர்களின் சம்மதத்தில்கூட அந்த நிலத்தை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு கையகப்படுத்திய நிலத்துக்கு மாற்றுக்காணி வழங்கியதாகக் கூறுகின்றனர். மலையாளபுரத்தில் செஞ்சோலை வளாகம் அமைந்துள்ள நிலம் 17 ஏக்கர். அதில் ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது.
இந்த நிலத்தை அபகரித்த காலத்தில் நாட்டில் 9 உரிமையாளர்களே இருந்தனர். பணம் வழங்கியமை உண்மையானால்கூட இந்த 9 குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கியிருக்க முடியும். எவ்வாறு 17 பேருக்கும் வழங்கப்பட்டது?. மாற்றுக்காணி வழங்கியதாகக் குறிப்பிடுகின்றனர். நில உரிமையாளர்கள் 17 பேரில் இன்றும் 13 பேரே அங்கு வசிக்கின்றோம். நிலம் வழங்கிய எமக்கும் கால் ஏக்கர் நிலம் மட்டுமே வழங்கப்பட்டது.
இவற்றை அறியாது எமது கூற்றைக் கேட்டும் பார்க்காத சிலர் எம்மைக் கொடுமைக்காரர்களாகக் காண்பிக்க முயற்சிக்கின்றனர். என்று காணி உரிமையாளர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச செயலரிடம் கேட்டபோது,
செஞ்சோலைக் குடியிருப்பு என்று குடியமர்ந்துள்ள பகுதி தமக்குரியது என்று உரிமை கோருபவர்கள் அதற்கான ஆவணத்தைச் சமர்ப்பித்தபோதும் அந்தப் பகுதியில் வேறு சிலரே குடியிருந்தனர். குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர்களால் நீண்டகாலமாக ஆராயப்பட்டு சட்டத்தின் பிரகாரம் சட்ட ஏற்பாடுகளை குறித்துக் காட்டி அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டோம். அதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதில் காணியாக கால் ஏக்கர் நிலம் வழங்கப்பட்டமையும் உண்மையான விடயம். அதனால் ஒரு ஏக்கர் நிலத்தை ஏற்க முடியாது என்று நில உரிமையாளர்கள் கூறுகின்றனர்.
மனிதாபிமான நடவடிக்கையாக அந்த நிலத்தில் தற்போதும் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மட்டும் கால் ஏக்கர் நிலத்தை வழங்க அந்த நிலத்தின் உரிமையாளர்கள் கொள்கையளவில் உடன்பட்டனர். அதன் பிரகாரம் அந்தப் பகுதியில் தற்போது 9 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிலம் வழங்கும் வகையில் தமது நிலத்திலிருந்து 3 ஏக்கர் நிலத்தை விட்டுத்தர முன்வந்தசமயம் தங்களில் 55 குடும்பங்கள் இருப்பதாக தற்போது காணியில் இருப்பவர்கள் கூறுகின்றனர். அதனால் எங்களால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை. அதனால் சட்டத்தின்படியே அணுகப்படுகின்றது என்றார்.
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் கனகராஜ்ஜிடம் இது பற்றிக் கேட்டபோது,
அந்த நிலத்தில் இராணுவம் இருந்த காலத்தில் எம்மோடு தொடர்பு கொண்டு முறையிட்டவர்கள் அந்த நிலத்தின் சட்டப்படியான உரிமையாளர்கள்தான். அதன் அடிப்படையிலேயே நாமும் இராணுவத்திடம் தொடர்பு கொண்டோம். அதன் பின்பு தற்போதைய சர்ச்சை ஏற்பட்ட பின்பும் ஆவணங்கள் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் பரிசீலிக்கப்பட்டே பிரதேச செயலருக்குத் தீர்வை முன்வைத்தோம். இருப்பினும் இரு தரப்பினரின் இணக்கத்துடன் எடுக்கும் சமரச முயற்சிக்கு எந்தத் தடையும் இல்லை. - என்றார்.
குறித்த காணியில் வசிக்கும் மக்கள் குறித்த காணிகளைத் தமக்குத் தர வேண்டும் என்று கோருகின்றனர். எனினும், அது சட்டமுறைப்படி தவறு என்று கூறியுள்ள பிரதேச செயலகம் குறித்த காணியில் குடியிருக்கும் மக்களை வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர். (த-105)

## மீள் குடியேற்ற அமைச்சால் யாழில் பல வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 8
மீள் குடியேற்ற அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சில வேலை திட்டங்கள் ஆரம்பிப்பு மற்றும் நிறைவடைந்த வேலை திட்டங்களைப் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை பிரதேசங்களில் வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான 72 வீடுகள் அமைப்பதற்கான நிதி மீள் குடியேற்ற அமைச்சால் ஒதுக்கப்பட்டது. அங்கு நிர்மாணிப்பு வேலைகள் நிறைவடைந்த வீடுகள் சிலவற்றை அமைச்சின் செயலர் வி. சிவஞானசோதி பயனாளிகளிடம் கையளித்தார்.
சங்கானைத் தபாலகம் அமைப்பதற்கான காணி கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிலையில், கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கு மீள் குடியேற்ற அமைச்சால் 8 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லும் நடப்பட்டது.
உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 171 வீடுகள் தலா 10 லட்சம் செலவில் அமைப்பதற்கு மீள் குடியேற்ற அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டது. அங்கு 100 வீடுகளின் வேலைகள் நிறைவடைந்த நிலையில் அவற்றில் 5 வீடுகள் ஏழாலைப் பகுதியில் அமைச்சின் செயலரால் திறந்து வைக்கப்பட்டன.
நிகழ்வுகளில் அரச அதிகாரிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர். (க-7,39)

## கைதடி– கோப்பாய் வீதியில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

உந்துருளியில் சென்ற பெண்ணுக்குக் கொள்ளையர் கத்தியைக் காட்டி பெண் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கைதடி கோப்பாய் வீதி பாலத்தடியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தனது அலுவலகத்தில் கடமை முடிந்து வீடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது கத்தியை காட்டி மிரட்டிய கொள்ளையர் பெண்ணைத் தள்ளிவீழ்த்தி சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். சங்கிலியின் அரைவாசிப் பகுதியே கொள்ளையர்களிடம் சிக்கியுள்ளது. (த-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாற்றில் 4 மாணவர்கள் சாதனை

வவுனியா, ஒக். 9

வவுனியா வடக்கு வலய பாடசாலைகளில் ஒன்றான வவுனியாவிவேகானந்தவித்தியாலயத்தில்62வருடகால பாடசாலை வரலாற்றில் 4 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேலாக பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

குறித்த பாடசாலையில் இம்முறை புலமைப் பரிசில் பரீட்சைக்கு 16 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில்சி. தீபிகா-179புள்ளிகளையும், ஸ்ரீ. சாம்பவி-168 புள்ளிகளையும், த. டிலட்சிகா-165 புள்ளிகளையும், வி. திவ்வியா-159புள்ளிகளையும்பெற்று பாடசாலைக்குப்பெருமைசேர்ந்துள்ளனர். ஏனைய மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இந்தச் சாதனையை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டலும், ஒத்துழைப்பும் வழங்கிய அதிபர் சி. சிவராசா மற்றும்மாணவர்களுக்குவழிகாட்டியாகவும், ஊன்றுகோலாகவும் தரம் 1தொடக்கம் ஐந்து வரை கற்பித்த ஆசிரியையானகிரிசாந்திசந்திரனையும்பாடசாலை சமூகம் வாழ்த்தியுள்ளது. (க-110)



## விடா முயற்சியுடன் கற்றேன் அதற்கானபலனைப்பெற்றேன்

*மன்னார் மாணவி பெருமிதம்*

மன்னார், ஒக். 9



"பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற ஊக்கத்துடன் தினமும் அதிகாலை எழுந்து விடாமுயற்சியுடன் கற்றேன். அதற்கான பலன் எனது பெறுபேற்றில் கிடைக்கப் பெற்றுள்ளது" என்று மன்னார் மாவட்டத்தில் 190 புள்ளிகளைப் பெற்றுள்ள சித்திவிநாயகர் இந்து தேசியப் பாடசாலை மாணவி சு. சுமித்திராயினி தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் அதிகளவான மாணவர்களைச் சித்தி பெற வைத்து சித்திவிநாயகர் இந்து தேசியப் பாடசாலை சாதனை படைத்துள்ளது. இந்தப்பாடசாலையில் 35பேர்வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்றுள்ளனர். குறித்த மாணவர்களில் சு. சுமித்திராயினி முதல்நிலையில் உள்ளார்.

"வீட்டில்எனக்குஊக்கமளித்தஎனதுபெற்றோருக்கும், பாடசாலையில்சிறந்தமுறையில்கற்றுத்தந்தஆசிரியர் பு. பிரதீபனுக்கும் நன்றி தெரிவித்துள்ள மாணவி, 'சிறந்த மருத்துவராக வந்து மக்களுக்குச் சேவையாற்றுவதே'தனது இலக்குஎனத்தெரிவித்துள்ளார். (க-56)

## தனியார் கல்வி நிலையம் நாடாத மாணவி வவுனியாவில் முதலிடம்

வவுனியா, ஒக். 9



தனியார் கல்வி நிலையம் செல்லாமல் பாடசாலைக் கல்வியை நம்பி மட்டும் கற்று என்னால் திறமையான புள்ளிகளைப்பெற முடிந்தது என்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற புதுக் குளம் கனிஸ்ட வித்தியாலய மாணவி விவேகானந்தராசா தரணியா தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில்பரீட்சையில்192புள்ளிகளைப்பெற்று மாவட்ட மட்டத்தில் குறித்த மாணவி முதலிடம்பெற்றுள்ளார்.

"நான் இந்த நிலையை அடைய வழிகாட்டிய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றி கூறுக்கின்றேன். நான் தனியார் கல்வி நிலையங்களுக்குச்செல்லாது, பாடசாலைக்கல்வியை மட்டும் நம்பியே படித்து இந்த நிலையை அடைந்துள்ளேன். எதிர்காலத்தில் மாவட்டத்தில் சிறந்த மருத்துவராக வந்து மக்களுக்குச் சேவையாற்றுவதே எனது இலக்கு" என்று மாணவி தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய 56 மாணவர்களில் 32 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுச்சித்தியடைந்துள்ளனர். (க-ரி4)

## பரீட்சைக்குத் தோற்றிய 63 மாணவர்களும் சித்தி

முல்லைத்தீவு, ஒக். 9

விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் 63 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 39 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைத் தாண்டிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 151 ஆகவுள்ள நிலையில் , குறித்த வெட்டுப்புள்ளியைத் தாண்டி, மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியான193புள்ளியைப்பெற்றமாணவரும்குறித்த பாடசாலைமாணவன்என்பதும்குறிப்பிடத்தக்கது. குறித்த பாடசாலையின் மாணவனான ர. அபிநயனே -193 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

கோ. கோபிதன்-183, ஸ். ரிதுசன் -182, சி. மிதுலன் -182, வ. அபிசா -180, இ. நிறோஜன்-172, ச. ஷாணக்கியன்-165, தி. ரிசிகேசன்-166, ஜெ. கம்சிகா-169, சு. மிதுலன் -160, கோ. யக்சினி-157, கு. கனுசிகன்-167, ம. யதுர்சன் -157, வி. திவிப்பிரியா -162, செ. கயல்நிலா-162, ச. சரணியா-165, சு. சயன்- 170, கி. நிஷான்- 164, வி. அபினேஸ் -165, க. தனுசியா-156, நே. பதுர்சிகா-160, தி. பிரதீசா-166, நே. கவின்சா-170, ஜெ. தரணிகா-155, கோ. அஜய்-159, தி. தருநிகன் -152, கு. பிருத்திகா-159, த. மயூரிகா -164, ம. சாருஜன் -162, தி. சிலோஜன் -161, ஜெ. அபிசன்-172, யோ. யோஜிதன்-155, செ. பவிதா-159, த. கிசானி-161, து. பவித்திரா -160, க. சாரங்கா-155, யோ. நிவேதினி- 166, வி. நிருபன்- 158, ம. மதுமிலன்-164 என்றபுள்ளிகளைப்பெற்றுள்ளனர். (க-222,105)

## கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் 6 மாணவர்கள் சித்தி

முல்லைத்தீவு, ஒக். 9

2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் 6 மாணவர்கள்வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

ச. மிதுஷா-166, ஸ்ரீ. கவிநயா-164, கி. கோகிலன் -158, தி. பரணிதா - 157, யெ. கவிப்பிரியா-155, க. கபிசாந்-152 ஆகிய மாணவர்களே சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

அதிபர். செ. ரவீந்திரராசா, உபஅதிபர் திருமதி. சிவகாமி கணேசலிங்கம் மற்றும் ஆசிரியை திரு [illegible] ஆகியோருக்கு பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர். (க-222)

## புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக். 9

தரம்5புலமைப்பரிசில்பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ளன. இவற்றில் பாடசாலை ரீதியாக மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

**வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பாடசாலை**
அ. பாருயா-167, யா. யூட்டிலக்சன்-160

**வெற்றிலைக்கேணி பரமேஸ்வராவித்தியாலயம்**
அ. அற்சாஜினி-168, சு. நிச்சயா - 156

**சாவகச்சேரிமகளிர்கல்லூரி**
க. அருள்பிரியன் - 183, ஆ. அபிராம்- 181, ச. புகழினியன்-172, ச. ஆத்மஜன் - 164, ஜெ. ரதுஷனா- 158, சு. அஸ்வினி-157

**எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க பாடசாலை**
ஆ. கனிஸ்ரன்-183, வ. காண்டீபன்-168, சொ. கிசோயினி -162

**மந்துவில் றோ.க.த.க பாடசாலை**
ஜெ. வியாஸ்கன்-169, எஸ். நிசாத்- 156

**குடமியன்அ.த.கபாடசாலை**
ந. கிருத்திகா - 171, ம. கௌசினி - 166

**மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்**
ஜெ. ஜனுஸ்ரன்-153

**கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்**
ர. தனிக்சிகா - 156

**கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்**
சு. கிசோக் - 173, சி. ஆத்மிகா - 170, ஜெ. அக்சிதா -167, கு. ஆர்த்திகா - 160, க. திசேகன்-158, த. பர்னிகா - 157

**போக்கட்டி றோ.க.த.க பாடசாலை**
இ. கனிஸ்ரன் - 164, ஜெ. அபினா -160

**மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்**
செ. சிந்தியசர்மா- 167

**இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்**
ஜ. தக்சனா -174, சி. கஜானன் - 171

**கச்சாய் மகாவித்தியாலயம்**
சு. டினோஜன் -168, செ. சுகானா - 162, இ. நிதர்சினி-157, ச. வவிசர்மி-152

**அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்**
ந. கோபிநாத் -153

**கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை**
சி. சிவானுஜா - 162

**அச்சுவேலி, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்**
மா. மாதுரி - 175, ஸ்ரீ. துதீசன்- 161, ச. சங்கீதன்- 128

**கரவெட்டி விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை**
நி. நிதுசன் - 175, க. திவிஷ்ணா- 155, ச. மிதுஷன் -153

**மூங்கிலாறு ஆரம்பப் பாடசாலை**
க. தனுசன் -165 மு. துளசிகா-165 கி. நிக்சன்-158

**மிருசுவில் அ.த.க. பாடசாலை**
ச. அபிஷா-182, ர. நமிதா -181, சி. பவதரன் -162, ம. தட்சிகன்-162, அ. அபிநயன் -158, சி. கௌதமன்-158, வி. லகிசா-158

**பண்டத்தரிப்பு மகளிர் உயர் தரப் பாடசசாலை**
இ. சன்சித் - 170, சி. யசிந்தன் -166, வி. யொஜேஸ் -157, நி. ஜெனோசியா-155

**கல்வியங்காடு இந்துதமிழ் கலவன் பாடசாலை**
சி. சியாமி-177, பா. சஞ்சயன்- 172, சு. பிரவீன்-170, யு. டிவோனிகா-170, ச. துவாரகன் -169, ல. கஜாணனசர்மா-169, கு. டிலுக் சன் -168, சி. சாம்பவி-164, அ. அபிசேகன் -163, க. கஜானி161, கி. கிருத்திகன் -163, வ. லக்சிகா -160, நா. சகானா- 156, சி. சந்தியா-154, பு. ஆருகன்-153
(க-9, 70, 63, 422, 159)

## வவுனியா சைவப்பிரகாசாவில் 26 மாணவர்கள் சித்தி

வவுனியா, ஒக். 9

2019 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்வவுனியா சைவப்பிரகாச மகளிர்வித்தியாலயத்தில் 26 மாணவர்கள்வெட்டுப்புள்ளிகளுக்கு அதிகமான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

அதிகபட்சமாக 183 புள்ளிகளை மாணவி ஒருவர் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவை ஆதரிக்கமாட்டேன்

## கூறுகிறார் அனந்தி

மன்னார், ஒக். 9
போர்க்குற்றவாளியான கோத்தபாயவை எப்போதும் ஆதரிக்கமாட்டேன் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் ரெலோ கட்சியின் சிவாஜிலிங்கம் போட்டியிடுவதற்காக அனந்தி சசிதரனே தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் வேட்பாளரைக் களமிறக்குவது கோத்தாபாயவின் வெற்றிக்கு வழி வகுக்கும் என்று ஒரு அரசியல் கருத்து நிலவுகிறது. அவ்வாறிருக்க கோத்தபாய ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கே அனந்தி சசிதரன் வழிவகைகளை ஏற்படுத்துகின்றாரா என்ற கேள்வி எழுகின்றது. பலருடைய கேள்வியும் இதுவாக உள்ளது.
இது பற்றி அனந்தி சசிதரனிடம் நேற்றுமுன்தினம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"கோத்தபாய ராஜபக்ச மகிந்த ராஜபக்ச போன்றவர்களைப் போர்க்குற்றவாளிகளாகப் பேசிக் கொண்டிருக்கும் நாங்கள் கோத்தபாய வரவேண்டும் என்று விரும்ப மாட்டோம். பதிவு செய்யப்பட்ட எந்தக் கட்சியும் ஆதரவு தராதபடியால் தான் சுயேட்சைக்குழுவாக மீன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். எந்தவொரு கட்சியும் எமக்கு ஆதரவு தரவில்லை. வடக்கு, கிழக்கு, மலையகம் என்று தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்கள் முழுவதிலும் சென்று மக்களிடம் ஆதரவு கோரவுள்ளோம்." என்று அனந்தி தெரிவித்தார். (து-213)

# வேட்புமனுத் தாக்கல் அன்று மாத்திரம் 96 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 9
அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 103 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்ற நேற்றுமுன்தினம் மாத்திரம் 96 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகக் கபே அமைப்பின் இயக்குநர் சுரங்கி ஆரியவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவ்வமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து இன்றுவரை 103 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அத்துடன் வேட்புமனுக்கள் தாக்கல் செய்த தினத்தில் 96 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது. அதற்கு முன்னைய நாட்களில் 7 தேர்தல் மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகள் காணப்படுவதாகவும் குறிப்பாக பிரதான 3 வேட்பாளர்களின் சுவரொட்டிகள் ஏராளமாக காணப்படுவதாகவும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
பல பகுதிகளில் ஏராளமான பதாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் வேட்பாளர்களை வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்நிலையில், கல்முனை சாய்ந்தமருது பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாதை ஒன்றின் மீது எண்ணெய் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

# தேசப்பற்றுள்ளவர்களே ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழையுங்கள்

## கோருகிறார் முன்னாள் இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக். 9
தேசப் பற்றுள்ளவர்கள் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். 71 வருட கால அரசியல் எத்தன்மை வாய்ந்தது என்பதைப் புதிதாக விமர்சனத்துக்கு உட்படுத்த வேண்டியதில்லை. புதிய மாற்றத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபடவேண்டும். இவ்வாறு தேசிய மக்கள் இயக்கத்தின் அரச தலைவர் வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.
அரச தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனு பத்திரங்களைத் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.
"71 வருட கால அரசியலில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைக்கப் பெற வேண்டும். பழமையான அரசியல் நிலமைகள் எத்தன்மை வாய்ந்தவை என்பதை நாட்டு மக்கள் அனுபவ ரீதியில் உணர்ந்துள்ளார்கள். நாடு எதிர் கொண்டுள்ள நிலமையைக் கருத்திற் கொண்டே தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளேன். நாட்டின் நிகழ்கால மற்றும் எதிர்கால இருப்புத் தொடர்பில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்"- என்றார். (ஒ.5)

# லண்டனில் தமிழ் இளைஞனை காணவில்லை

கொழும்பு, ஒக். 9
லண்டனில் இலங்கைத் தமிழ் இளைஞன் காணாமல் போயுள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.
27 வயதான சிவராம்யோகேஸ்வரன் என்ற இலங்கை இளைஞன் இறுதியாகக் கடந்த மாதம் 5ஆம் திகதி கிங்ஸ்ரன் வீதியோரத்தில் காணப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் ஆட்டிஸம் நோயால் பாதிக்கப்பட்டவர் எனவும் அவர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். காணாமல் போன நபரை தீவிரமாகத் தேடி வரும் பொலிஸார், அவரைக் கண்டுபிடிக்க பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர். (ஒ.5)




# ஏப்ரல் 21 தாக்குதல் 2 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 9
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்கு அரச தலைவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்குத் தற்போது 2 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
எதிர்வரும் 14ஆம் திகதி வரை முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அரச தலைவர் ஆணைக்குழுவின் செயலர் ஹேரத் தெரிவித்துள்ளார்.
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு, முதலாம் மாடி, 5ஆம் மண்டபம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பிவைக்க முடியும்.
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழுவின் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஜனக டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஹால் சுனில் ராஜபக்ஸ, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல குமார அத்தபத்து, ஓய்வு பெற்ற அமைச்சின் செயலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.
அதிகார முறைகேடு, பொருட்படுத்தாமை, பின்வாங்குதல், பொறுப்புணர்ந்து செயற்படாமை உள்ளிட்ட காரணிகளால் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவங்கள் மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைப்பதே அரச தலைவர் ஆணைக்குழுவின் முக்கிய கோட்பாடாகும்.
இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரைவானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை நடாத்துதல், பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டவர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பில் ஆராய்வதும் அரச தலைவர் ஆணைக்குழுவின் செயற்பாடாகும். (ஒ.5)

# புத்தளத்தில் அருவக்காடு அருகில் வெடிச் சத்தம்

புத்தளம் அருவக்காடு குப்பை சேகரிக்கும் பிரிவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மிகப் பெரிய வெடிச் சத்தம் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரவு 8.45 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெரிய சத்தத்துடன் வெடிப்பு இடம்பெற்றுள்ளதாகக் கரைத்தீவு மற்றும் சேராக்குளி மக்கள் தெரிவித்தனர். அருவக்காடு குப்பைத் திட்டத்தில் முதன் முதலாக மீதென் வாயுவை எடுப்பதற்கான சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் மேற்கொண்டபோது, அங்கிருக்கும் குழாய் ஒன்றில் ஏற்பட்ட திடீர் கசிவு காரணமாக இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் எவ்விதமான உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை. அத்துடன், குறித்த பகுதியில் பணிபுரிந்த அனைத்து ஊழியர்களும் மிகவும் பாதுகாப்பாக அவ்விடத்தை விட்டு வெளியேற்றப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.
அத்துடன், கொழும்பிலிருந்து அருவக்காடு குப்பை சேகரிக்கும் பிரிவுக்கு குப்பைகளை ஏற்றிக்கொண்டு வந்த 29 டிப்பர் வண்டிகள் மீண்டும்கொழும்புக்கேதிருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார். (ஒ.5)

# இடையூறுகள் விளைவித்தனர் கோத்தாவின் ஆதரவாளர்கள்

## விசாரணை கோருகிறார் ஹிருணிகா

கொழும்பு, ஒக். 9
தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் செல்லும்போது பொதுமக்கள் முன்னணியின் ஆதரவாளர்களால் தனக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு கோத்தபாய ராஜபக்ச பதில் கூற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார். ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
"இவ்வாறான அராஜகமான ஆதரவாளர்களுடன் எவ்வாறு ஒழுக்கமுடைய நாட்டை கட்டியெழுப்ப முடியும். கோத்தபாயவின் ஆதரவாளர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் விசாரணை நடத்த வேண்டும்" -என்றார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிலிங்கத்தின் முடிவுக்கும் கட்சிக்கும் தொடர்பே இல்லை

## ரெலோவின் அடைக்கலநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

இலங்கையின் 8ஆவது அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளேன் எனக் கூறி சிவாஜிலிங்கம் எடுத்த முடிவுக்கும் எமது கட்சிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அமைப்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார். இது பற்றிக் கேட்டபோதே அவர் மேலும்தெரிவித்ததாவது:

கட்சியிடம் எந்தவொரு கருத்தும் கேட்காமலேயே அவர் முடிவெடுத்துள்ளார். அதனால் கட்சி விரைவில்கூடி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். அவர் மேற்கொண்ட தனிப்பட்ட முடிவுக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது- என்று தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:

சிவாஜிலிங்கம் வேட்புமனுத் தாக்கல் செய்தால் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதா, இல்லையா? என்று தமிழீழ விடுதலை இயக்கம் தீர்மானம் எடுக்கும். எமது கட்சி ஒழுக்கமான கட்டுகோப்புள்ள கட்சி, ஜனநாயக ரீதியாகச் செயற்படும் கட்சி. அதில் முக்கிய பதவி வகிக்கும் சிவாஜிலிங்கம் தன்னிச்சையாகச் செயற்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அது எமது கட்சிக்குப் பாதகத்தையே ஏற்படுத்தும்.

இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதையோ, தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதையோ நாம் விரும்பவில்லை. வெற்றி பெறக்கூடியவருக்கு வாக்களிக்காமல் வேறு நபருக்கு வாக்களித்தால் அவர்கள் வெற்றிபெற்ற பின்னர் எம்மைப் பழி வாங்குவார்கள் என்ற அச்சம் எமது மக்கள் மத்தியில் இருக்கிறது. அத்துடன் கோத்தபாய தொடர்பாகவும் எமது மக்கள் அச்சமடைகின்றனர். எனவே இவ்வாறான சம்பவங்கள், எமது மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற ஒருவரை மீண்டும் கொண்டு வந்து விடுமோ? என்ற அச்சம் இருக்கிறது-என்றார். (து-105, 110)



“ எமது கட்சி ஒழுக்கமான கட்டுகோப்புள்ள கட்சி, ஜனநாயக ரீதியாகச் செயற்படும் கட்சி. அதில் முக்கிய பதவியை வகிக்கும் சிவாஜிலிங்கம் தன்னிச்சையாகச் செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

# 7,500 கண்காணிப்பாளர்களை களமிறக்குகிறது கபே அமைப்பு

கொழும்பு, ஒக். 9

அடுத்த மாதம் நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ‘கபே’ எனப்படும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் 7 ஆயிரத்து 500 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளது.

வழமையை விட அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், கண்காணிப்பு பணிகளுக்காக அதிகளவான ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஒ,5)

# ரணிலே தொடர்ந்து தலைமை அமைச்சர்

## அஜித் பி பெரேரா உறுதி

கொழும்பு, ஒக். 9



அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றால், ரணில் விக்கிரமசிங்கவே தலைமை அமைச்சராக இருப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்போது எந்தத் தலைமைத்துவப் பிரச்சினையும் எழவில்லை. கட்சியின் தற்போதைய தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஐந்து ஆண்டுகளுக்கு 2024 வரை, தலைவர் பதவியில் இருப்பார்.

இது தொடர்பாக எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும், அரச தலைவர் வேட்பாளர் தொடர்பான விவகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு சுமுகமான முறையில் தீர்த்ததோ அதே வழியில் தீர்ப்போம்.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றாலும், தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே நீடிப்பார்.

ஏனென்றால், 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கொண்டவரே, தலைமை அமைச்சராக இருக்க முடியும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரே, தலைமை அமைச்சர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

தற்போதைய நாடாளுமன்றத்தை, நான்கரை ஆண்டுகள் பூர்த்தி செய்யும்வரை கலைக்க முடியாது. இந்த நாடாளுமன்றம், 2020ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதியே, நான்கரை ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது- என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,5)

# கோத்தபாய தலைவரானதும் ரணிலின் ஆட்சி இருக்காது

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 9

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானதும், ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக இருக்கமாட்டார். புதிய தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாயவின் வெற்றியைத் தடுத்து நிறுத்தவே தற்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் என்ன சதித்திட்டங்களை மேற்கொண்டாலும் அதனை நாங்கள் வெற்றிகொள்வோம். அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வானூர்திகள் மூலம் கொண்டுவரப்படும் பொருள்கள் தொடர்பில் அரசு வெளிப்படுத்தாமல் இருக்கின்றது.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசு இறுதி நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன் பெரிய சதித் திட்டத்தை மேற்கொள்ளப்போகின்றதா? என்ற சந்தேகம் எமக்கிருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சி அரச தலைவர் வேட்பாளார் சஜித் பிரேமதாச விலங்கிடப்பட்டே வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கட்சி தலைவராக இருப்பார். ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் மற்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க கட்சியின் உபதலைவராக இருக்கவேண்டும்போன்ற நிபந்தனைகள் அவருக்கு விடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் சஜித் பிரேமதாச அரச தலைவரானாலும் தற்போதுள்ள அரசின் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அரசு எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாலும் கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் வெற்றிபெறுவது நிச்சயமாகும். அவர் அரச தலைவரானதும், தலைமை அமைச்சர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க இருக்கமாட்டார்.

கடந்த அரச தலைவர் தேர்தலுக்குப் பின்னர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவரானவுடன் ரணில்விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்கினார். அத்துடன் புதிய அமைச்சரவையையும் அமைத்தார். அதே போன்றே கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானதும் புதிய தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்படும்- என்றார். (ஒ,5)

# லண்டனில் இலங்கையர் 4பேர் கைது

கொழும்பு, ஒக். 9

லண்டனின், லூட்டான் வானூர்தி நிலையத்தில் நான்கு இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். தடைசெய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்திலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ,5)

# கோத்தாவை ஆதரிக்கேன்!

## போட்டியிலிருந்து விலகிய குமார வெல்கம அறிவிப்பு

தேர்தலில் போட்டியிடாத போதும் பொதுமக்கள் முன்னணிக்கு ஒரு போதும் ஆதரவு வழங்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். சமல் ராஜபக்ஷ வேட்புமனு தாக்கல் செய்யாத நிலையில் தானும் வேட்புமனு தாக்கல் செய்யாதிருக்க இறுதி நேரத்தில் முடிவு செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

“சுதந்திரக்கட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றேன். சுதந்திரக் கட்சி கோத்தபாயவுக்கு ஆதரவுவழங்குவதால் குறுங்கால இலாபமே கிடைக்கும். அரச தலைவர் தேர்தலில் சுயாதீனமாகப் போட்டியிட்டு வெற்றிபெறமுடியாது. அதனால் இம்முறை வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. ராஜபக்சவினருக்கு மாத்திரம் போட்டியிட அனுமதி வழங்க முடியாது. தினேஸ் குணவர்தனவை களமிறக்கியிருக்கலாம்”- என்றார் குமார வெல்கம. (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
@UthayanPrint
ஒக்ரோபர் 09, 2019

# புதன் பொய்கை

கே.எஸ்.சிவஞானராஜா

உலக மாந்தர்கள் சீரும் சிறப்பும்பெற்று பேரும் புகழோடு வாழ்வதற்கும் ஆரும் பெறாத அறிவோடு பாரும் விசும்பும் படியாகப் புண்ணியப் பேறடைவதற்கும் வழிகாட்டி வரவேற்பன புத்தகங்களேயாகும். நூல்கள் ஒவ்வொன்றிலும் ஆக்கியோனின் ஆன்மா உயிர்கொண்டு உணர்வோடு பேசிக் கொண்டேயிருக்கும். அந்த நூலை ஒரு வாசகன் வாசிக்கும்போது வாசகனின் ஆன்மாவும் நூலை ஆக்கியோனின் ஆன்மாவும் கதைத்துக் கொள்ளும். இதுவே மனித சிந்தனையின் அபிவிருத்திக்கும் புதியன படைத்தலுக்கும் வழிகோலுவதாக அமைகிறது. எமது நாட்டுக்கு அவசியமும் அவசரமும் ஆகவேண்டிய தேவைப்பாடு இவை இரண்டுமேயாகும்.

சிந்தனை விருத்திக்கும் புத்தம் புதியன படைத்தலுக்கும் ஏதுவாக ஒரு ஆரோக்கியமான உலகைக் காண்பதற்கு வாய்ப்பாக அமைந்த கண்காட்சியே அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சி. என்னையும் அது கவர்ந்திழுக்க யானும் பார்ப்பதற்காக அங்கு சென்றேன். பிரமித்தேன்.







## கொழும்பில் சிறப்புற இடம்பெற்ற

# பன்னாட்டு புத்தகக் கண்காட்சி







**தமிழ் புத்தகங்கள் ஏராளம் ஆனால் தமிழர்களோ சிலர்**

416 கூடங்களில் மிகவும் பிரமாண்டமான ஒழுங்கமைப்பிலே இலட்சக் கணக்கான புத்தகங்கள் நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தன. அருமையாகத் தமிழ் புத்தகசாலைகள் தம்மையும் பெருமைப்படுத்திக் கொண்டன. இரண்டு நேரச் சாப்பாடும் உடன் எடுத்துச் செல்வோமாக இருந்தால் மெத்த உடன்பாடாக அமையும். சுத்தமான நீர் தொடக்கம் மலசலகூடம் வரை மிகவும் நேர்த்தியாக உபயோகிக்க ஆவன செய்யப்பட்டிருந்தது. காலை மதிய நேர உணவுகள் மிகமிகப் பாதுகாப்பாகக் காப்பிடப்பட்டிருந்தன. பெருவாரியான மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

மக்களைப் பார்ப்பதா! நூல்களைப் படிப்பதா! மண்டபத்தைப் பூசிப்பதா! கண்களைத் திருத்துவதா? என்று மனம் தத்தளித்தது. சனசமுத்திரத்தின் மத்தியில் கால்கள் என்னைக் கைதுசெய்து ஓரிடத்தில் வலுக்கட்டாயமாக இருத்தின. அது ஒரு சிறிதான மண்டபம். ஏதோ பேசுகிறார்கள். பாடுகிறார்கள், கதைக்கிறார்கள், எழுதுகிறார்கள், எல்லோருமே அவதானமாக இருக்கிறார்கள். குறிப்பும் எடுக்கிறார்கள். ஆனால் நான் மட்டும் கௌரவமாக இருந்து கொண்டேன். காரணம் எனக்கு மட்டும் அங்கு இடம்பெற்ற மொழி நடவடிக்கைகள் ஒன்றுமே விளங்கவும் இல்லை. புரியவும் இல்லை. இந்த நிலையில் தமிழ் பேசும் எவரையும் என்னால் சந்திக்க முடியவில்லை. யாழ்ப்பாண வாசனை வீசுமோ? என்று ஆவலுற்றவனாய் அலையவும் கலையவும் தொடங்கினேன். நேரம் பிற்பகல் மூன்று மணியாயிற்று. எனது வயிறு என்னையே சாப்பிடத் தொடங்கிற்று. மார்டின் விக்கிரமசிங்க என்ற மூத்த இலக்கியப் படைப்பாளியின் புத்தகக் கூடத்துக்குள் சென்றபோது அவரது நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், பேட்டிகள், கவிதைகள், வரலாறுகள், மொழிபெயர்ப்பு நூல்கள் என ஆயிரம் நூல்கள் வருவோரை வாவென்று உள்ளே அழைத்தன. யானும் சென்று மார்ட்டின் விக்கிரமசிங்கவைத் தரிசித்தேன். மார்ட்டின் விக்கிரமசிங்க 1891-1976 காலத்துக்குச் சொந்தக்காரர். சிங்கள இலக்கியம் நவீனமடைவதற்கு காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே உழைத்து வந்தவர். அவர் ஓர் இலக்கிய இரசனை ததும்பும் படைப்பாளி. சிறுகதை நாவல் ஆசிரியர். கட்டுரை வரைபவர். திறனாய்வாளர். உள்ளத்தைக் கூட்டிக் குறைக்காமல் பகுப்பாய்வு செய்யும் விமர்சகர். இதழாசிரியர். வெளிநாட்டு நாகரிகம் உண்டாக்கும் தாக்கங்களையும் நெருடல்களையும் இலக்கிய வீச்சுக்குள் கொண்டு வருவதில் வெற்றி கண்டவர். இறுதி மூச்சுவரை பேனாவையே ஆயுதமாகக் கொண்டு எழுத்துப் புரட்சி செய்தவர். 1924ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த 108 சிறுகதைகளில் தலைசிறந்த பத்துக் கதைகள் மிகவும் பிரம்மாதவையாகும். கோலி விளையாட்டு, திகழ் சுடுகாடு, காதல் அடிமைத்தளை, பணம், தாய், புத்தாண்டு பிறப்பதற்கு முன், பொத்தல் வீழ்ந்த கோட், பெண் அந்தோ அய்யாவின் வீரப் பிரதாபங்கள் தமிழ்மொழி பெயர்ப்புகளாகும்.



**நூல்களின் வகையறா**

இதைவிட விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், ஆங்கிலம், மதங்கள், வரலாறு, உலக மேதைகள், கண்டுபிடிப்புக்கள், சிறுவருக்கான நூல்கள், காடுகள், நதிகள், மலைகள், விண்வெளி சார்ந்தவை, விஞ்ஞானிகள், மெஞ்ஞானிகள், அரசியல், ஆன்மிகம், மருத்துவம், கைவைத்தியம், ஆலயங்கள், கலைகள், ஆராய்ச்சி நூல்கள், நாடாளுமற் நடவடிக்கைகள், காப்பியங்கள், நீதி நூல்கள், விவசாயம் சார்ந்த சிங்களம், தமிழ், ஆங்கிலம் சீனா மொழிகளில் புத்தகங்கள் குவிந்து பரந்து விரிந்து நிறைந்து இருந்தன. மிகவும் மலிவான விலையில் நாமும் திளைத்தோம். கண்களும் கால்களும் ஓய்வுக்காக கெஞ்சின. ஆனால்.... கிடைக்கவில்லை. கிடைக்கவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தை காவியமாக்கிட கூவியழைத்த தாயும் சேயும் ஓவியக் கண்காட்சி

கே.எஸ்.சிவஞானராஜா

கருவி சிறப்புத் தேவையுடையவர்களின் சமூகவள நிலைய அபிவிருத்தி நிதிக்காக கருவி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஓவியர் எம்.எஸ்.சிவதாசனின் 'தாயும் சேயும்' ஓவியக் கண்காட்சி திருமறைக் கலா மன்ற கலைத்தூது கலாமுற்ற ஓவியக் கூடத்தில் நெஞ்சை அள்ளியவாறு அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாசத்தின் நெருக்கத்தையும் பார்ப்பவர்களின் உருக்கத்தையும் தேசத்தின் மிச்சங்களையும் தெவிட்டாமல் பார்க்க வைத்த முப்பத்தொரு ஓவியங்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. யாவும் அபாரம்!

பாரம்பரிய கோட்பாடுகளுடன் நவீன யுக்திகளும் சேரும்படியாக மிகவும் நேர்த்தியாகவும் அற்புதமாகவும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. அடேயப்பா! ஓவியங்கள் யாவும் உச்சத்தைத் தொட்டன. எடுத்துக் கொள்ளப்பட்ட கருப் பொருளுக்குப் பாதகம் ஏற்படாத வண்ணம் கருச் சிதைவுக்கு எள்ளளவும் இடமளிக்காது விருப்புடனும் பொறுப்புடனும் உருப்பெற மிகவும் தன்னை அர்ப்பணித்திருக்கின்றார் சிவதாசன் ஓவியர்.

### பல தரப்பினருக்கும் உகந்த படைப்புகள்

பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், மதப் பெரியோர்களுக்கும் குறிப்பாக சிறார்களுக்கும் உள்ளத்தைக் தூயதாக்கும் ஓர் ஒப்பற்ற படைப்பு இதுவாகும். ஓர் ஓவியக்கலைஞன் தான் வாழ்வதோடு மட்டுமல்லாமல், ஒரு நாட்டையே ஆரோக்கியமாக வாழ வைக்க முடியும் என்பதற்கு தரப்பட்ட ஓவியங்கள் தக்க உதாரணங்களாகும். இந்த ஓவியங்கள் வெளிநாட்டில் இடம் பெற்றிருக்குமாயின், கோடிக்கணக்கான நிதியை வசூல்பண்ணி கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலைய அபிவிருத்திக்கு வழங்கியிருக்க முடியும் என நம்பலாம். இலங்கையில் இதன் பெறுமதியைக் குறிப்பாக வடமாகாணம் இன்னும் உணரவில்லையே! ஆன்மிகத்திலும் அரசியலிலும் கட்டடக் கலையே வளர்ந்துள்ளது. கலைகள் எதிர்பார்த்த அளவுக்கு வளரவும் இல்லை வளர்க்கப்படவும் இல்லை.

கட்டடங்களும், கதிரைகளும் கனகச்சிதமாக அமைந்து காட்சிப்பொருளாகியுள்ளன. மேடை அதைவிட பிரம்மாதமாக இலங்கையில் மிளிர்கிறது. சமயமும் அரசியலும் வழக்கிலேயே தம் வாழ்வினைச் சங்கடங்களோடு நடத்திக் கொண்டிருக்கின்றன.

### சம்பளத்துக்குச் சமயம் சம்பளத்துக்கு அரசியல்

சம்பளத்துக்கு வாழ்க்கை என்று இருக்கும்போது, சாத்தியமான, சுவாத்தியமான கலைகள் யாவும் இலவசமாக அதைக் கொண்டுவரும்போது அதன் பெறுமதி உணரப்படுவதில்லை. அல்லாமலும் அவைகள் ஊக்குவிக்கப்படுவதும் இல்லை. முகமனிலும், அறிமுகத்திலும் பண முதலீடுகளிலுமே கலைகள் சிக்கித்தவிக்கின்றன. இவற்றின் விடுதலை அவசியமாகவுள்ளது.

### கொள்ளை கொண்டவை

'மோகன ஓவியம் நீ படைத்தாய் எந்தன் மோகததைத் தூண்டியே காதல் தந்

“சம்பளத்துக்கு வாழ்க்கை என்று இருக்கும்போது, சாத்தியமான, சுவாத்தியமான கலைகள் யாவும் இலவசமாக அதைக் கொண்டுவரும்போது அதன் பெறுமதி உணரப்படுவதில்லை. அல்லாமலும் அவைகள் ஊக்குவிக்கப்படுவதும் இல்லை. முகமனிலும், அறிமுகத்திலும் பண முதலீடுகளிலுமே கலைகள் சிக்கித்தவிக்கின்றன. இவற்றின் விடுதலை அவசியமாகவுள்ளது.”

தாய் தாகமும் கொண்டேன் நான் தழுவியணைத்திடவே வேகமாய் வாராயோ வேளையில் ஓவியனே'

பன்னாட்டுக் கலைஞனும், இயலிசை வாரிதியும், மகா வித்துவானுமாகிய இணுவையூர் வீரமணிஐயர் ஏற்கனவே ஓவிய தரிசனங்களைப் பார்த்து இரசித்து அரவணைத்த பாடலே இதுவாகும், தாசனின் தாயும் சேயும் ஓவியக் கண்காட்சியையும் வீரமணி ஐயா பார்த்திருந்தால் இதே கற்பனை இதே பாடல் இங்கும் ஒலித்திருக்கும்.

### வடபுலம்சார் ஓவியங்கள்

கல்வியை மூலதனமாக்கிய எமது மண்ணில் குறிப்பாக போரினால் ஏற்பட்ட தாக்கங்களைப் பின்னணியாக்கி இழையோடச்செய்து பெற்ற தாயானவள் பிள்ளைகளுக்காகத் தவமிருந்து வழிமீது விழிவைத்து எதிர்பார்த்துக் காத்திருந்து துவிச்சக்கரவண்டியில் பாசம் வழிந்தோடக் கூட்டி வருவதையும்,

அதேபோல பஞ்சம், பசி, பட்டினி, போராட்டம் இதற்குள்ளும் பிள்ளைகளின் அடி[illegible] விக்கு முத[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பாடசாலை அனுப்புவதற்காகத் தாய்படுகின்ற பொறுப்புக்களையும் வேதனைகளையும் மிகவும் துல்லியமாக பாசம் ததும்ப அன்னியோன்னியமாக்கி எம்மையும் நெருக்கமாக்கியுள்ளார். ஒரு நாடு தாயிலேயே தங்கியுள்ளது. அதில் பிள்ளைகள் முத்து முத்தான சித்திரங்கள்.

காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா!
புழுதி துடைத்து நீரும் ஆட்டிப் பூவுஞ்
சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா
அள்ளிப் பொருளைக் கொட்டிச்சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக்குணத்தில் செய்தானென்று
பொறுத்துக்கொள்ளும் அம்மா..!
பாடசாலை விட்டநேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா!

வித்துவான் வேந்தனாரின் இந்தக் கவியின் கனியமுதத்தை ஓவியர் சிவதாசன் நனியுறுந்தேன் சொட்டுமாறு வண்ண ஓவியம் படைத்துள்ளார். அவர் பிரம்மனுக்கு நிகராகின்றார்.

முதலாவது ஓவியத்தில் பிரவாகித்த தாயன்பு, ஒன்பதாவது ஓவியமான அன்னை திரேசாவின் தாயன்பில் உச்சம் பெற்று இருபத்தைந்தாவது ஓவியமான வெள்ளத்தில் பாடசாலைப் பையினைக் கொண்ட பிள்ளையைச் சுமந்து செல்லும் தாயவளின் அன்பினில் வெளிப்படையாகி முப்பத்தொராவதுபடத்தில் பசுவும் கன்றும் ஓவியத்தில் முத்திரை பதித்துவிட்டது. முப்பத்தொராவது ஓவியம் அற்புதம் கன்றை ஈன்றெடுத்த தாய்ப்பசுவின் பாசத்தால் கன்றுக்குத் தாயின் முத்தம் மடியின் பாலுள்ள காம்பின் பிரவாகிப்பில் கன்று அடேயப்பா ரொம்பப் பிரம்மாதம்.

### படைப்புகள் பலவிதம்

இதைவிட சங்கிலியன் தோப்பு, மந்திரிமனை நூலகம், கோட்டை தூக்கு மேடை, உடைந்த கட்டிடங்கள், பங்கர் வடலிகள், கருக்கு மட்டைகள், சோபையிழந்த மரக்கொப்புக்கள், ஜாம்போத்தல் லாம்பு, முள்ளுக் கம்பி வேலிகள், கற்பூரச்சட்டி, வீணை, வயலின், துவிச்சக்கர வண்டி, ஒடிந்த காய்ந்த பட்ட மரக்கொப்பு, பிஸ்கற் பெட்டிகள் யாவும் ஓவியங்களை உயிர்பெற வைக்கின்றன. ஊக்கம் பெற ஊக்குவிக்கின் [illegible] தாய் கருவுற்றவேளை [illegible]காகப் பின்னப்படும் துணி

குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு இரைபோடுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாயின் கற்பனையாகக் குழந்தையும் அகமகிழ்கிறது. கருவில் உருவாகும் படிப்பு இதுவாகும். மகளின் தலையைச் சீவி வாரிக் கட்டும் தாயின் முனைப்பும் முகபாவமும் முகப் பாவனையும் வறுமைக்குள்ளும் வடிவாகிறது. அடுத்த ஓவியப்படைப்பு எட்டில்!

இன்னுமொரு ஓவியப்படைப்பினில் வானிலிருந்து விழும் குண்டுகளில் இருந்து தப்புவதற்காக சங்கிலியன் தோப்பருகே கைக்குழந்தையோடும் மகனோடும் ஓடித்தப்புகின்ற தாயின் சுபாவமும் சொரூபமும் சலாகிப்பும் நெஞ்சை வருடுகிறது. ஓவியரும் ஓவியமும் ஒன்றாகிவிட்டநிலை.

### பாலுக்காக குழந்தை அழுகிறது!

திறந்த உருக்குலைந்த கட்டடம்... அக்கம், பக்கம், வெட்கம் பார்க்கவில்லை. மடி திறந்து குழந்தைக்குப் பாலூட்டுகிறாள் அந்த இளம் தாய். பகிரங்கமான ஓர் இடத்தில் பாலூட்டுவதும் ஒரு படிப்புத்தான். இதிலே ஒரு பக்குவமும் பண்பாடும் காணப்படுகிறது. உலகம் இதிலே படிக்க வேண்டிய பண்பாடுகள் ஏராளம் எமக்கும் உண்டு. அற்புதம்! அதிசயம்! ஆச்சரியம்! மிக்கதான இந்தக் கவினுறு கண்காட்சி கருவிக்கு சிவதாசன் கொடையாக்குகின்றான்.

மொத்தத்தில் பெண்ணானவளின் தியாகத்தினாலேயேதான் இந்த உலகம் சிருட்டிக்கப்படுகிறது. இதில் நம் நாடு விதிவிலக்கல்ல.

720 கோடி மக்களைப் பெற்றெடுத்து ஆளாக்கியவள் பெண்ணேயாவாள். ஒரு தந்தையின் சொற்ப நேரக் கடமை ஒரு பெண்ணை முழு நேரப் பொறுப்பாளியாக்கி, அவளை மிக எளிதில் பாட்டியாக்கிட உலகம் படம்பார்க்கிறது.

பொதுவாக இவ்வுலகில் ஆண்களை உயர்வாகவும் உச்சத்திலும் பார்ப்பதுபோல பெண்களை ஒரு வாசனைப் பொருளாகவே பார்க்கின்றனர். கூடுதலாக அனுபவிக்கின்ற பேசுபொருளாகவே பட்டியலிடுகின்றனர்.

வடலிகள் வானுயரட்டும், பெற்ற வயிறுகள் வாழ்த்தட்டும், படலைகள் பேறாகட்டும். இந்தப் பாரினில் தாய்மை வெல்லட்டும். இந்தக் கண்காட்சியால் சிறப்புத் தேவையுடையவர்கள் பேறடைவர்.

# 'பிக்பொஸ்' எதிர் 'சுணைக்கேடு'

தேவநாயகம் தேவானந்த்



சமகால ஜேர்மன் நாடக ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் லூட்ஸ் ஹப்பனர் எழுதிய (Creeps) நாடகத்தை கொழும்பில் இயங்கிவரும் ஜேர்மன் கலாசார அமைப்பான கோதே நிறுவனத்தின் அனுசரணையுடன் செயல்திறன் அரங்க இயக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 2012ஆம் ஆண்டு 8ஆம் மாதம் முதல் தடவையாக மேடையேற்றியது. இந்த நாடகத்தை ஆங்கிலம் வழியாக தமிழில் மொழிபெயர்த்தவர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம். தே.தேவானந்த் இதனை நெறியாள்கை செய்திருந்தார்.

++++

இந்த நாடகத்தைப் பார்த்த இலக்கிய மற்றும் சினிமா ஆர்வலரான யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் உதவிப்பதிவாளர் கிருஷ்ணகுமார் தெரிவிக்கின்ற\போது, 'சுணைக்கேடு' என்ற பதின்ம வயதினர்களுக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தயாரிப்பதற்காக, ஸ்ரூடியோவில் உருவாக்கப்பட்ட நவீனமான, கவர்ச்சியான இருக்கைகள் கொண்ட அமைப்புடன் கூடிய மேடை. நடுவில் சுருண்டு விரியக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த வீடியோ திரை என வித்தியாசமான தோற்றத்தில் இருந்தது மேடை' என்று குறிப்பிடுகிறார். இது பின்பொஜ் வீட்டின் அமைப்புக்கு ஒத்ததானதாக அமைந்திருந்ததையும் குறிப்பிட முடியும்.

சமகால ஊடக உலகில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வகிக்கும் பங்கு மிக ஆழமானது. இளைய சமூகத்தினரின் சிந்தனை, நடை, உடை, பாவனை, உணவு என்று அனைத்தையும் தீர்மானிக்கின்ற சக்தியாக இவை அமைவதோடு, அவர்களை வாழ்வின் யதார்த்தத்தை உணர விடாமல் ஒரு பகட்டு மாயைப் பிடியில் வைத்திருக்கின்றன. இந்த இறுதித் தேர்வுக்கு வரும் பெட்ரா, மரேன், லில்லி ஆகிய மூவரும் முற்றிலும் வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்டவர்கள். ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வேறுபட்ட சமூகப் பின்னணியில் இருந்தும் வருபவர்கள். மரேன் சூழலியல் ஈடுபாடு கொண்டவள். இலகுவில் பதற்றமடைபவள்.

பெட்ரா இசையில், நடனத்தில் ஈடுபாடு உள்ளவள், இயல்பானவள். முன்னைய கிழக்கு ஜேர்மனியிலிருந்து வந்தவள். லில்லி வசதியான குடும்பப் பின்னணியுள்ளவள். செல்வாக்கைப் பயன்படுத்தி வேலை பெறக்கூடியவள். இந்த மூவரும் ஓடிக் கொண்டிருக்கும் வீடியோ கமராவுக்கு முன்னால் முகம் தெரியாத குரலால் பரிசோதிக்கப்படுகிறார்கள். நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் நெறியாளருமான ஒருவருடைய குரலே அது. அந்த மூவரது திறமைகள் வெளிப்பட பல்வேறுவிதமான சோதனைகள் வைக்கப்படுகின்றன. ஆடும்படி, பாடும்படி, நேர்காணல் செய்யும்படி, உரையாடும்படி பலவகையான சோதனைகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பெண்ணும் தனக்கு மட்டுமே அறிவிப்பாளர் பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றனர். ஒவ்வொருவரும் தமக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.



எழுதப்படாத நாடக வரலாறு 23

ஒவ்வொருவரும் தமது அந்தரங்கங்களை வெளிப்படுத்த வைக்கப்படுகின்றனர். "நான் கிழக்கு ஜேர்மனியில் இருந்து வந்ததால் புறக்கணிக்கப்படுவேனோ" என்று பெட்ரா தவிக்கிறாள். "நான் சோர்வடைந்து போவதால், எனது ஆதிக்க சுபாவத்தால் தெரிவு செய்யப்படாது போவேனா" என மரேன் கவலைப்படுகிறாள். லில்லி தனது தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி வேலையைப் பெறமுடியுமா? என்று யோசிக்கிறாள். இது மற்றவர்களுக்குப் பொறாமையை உண்டாக்குகிறது! என்று கிருஷ்ணகுமார் மேலும் நாடகம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

++++

பிக்பொஸ் வீட்டில் இருப்போரை ஒத்த நிலமையை இதில் உணரமுடிகிறது, இதனையே கிருஷ்ணகுமார் இவ்வாறு குறிப்பிடுகிறார் போலும். 'சுணைக்கேடு' நாடகத்தின் மூன்று பெண்களும் ஒரு குரங்காட்டியின் கட்டளைக்குப் பணிந்து செயலாற்றும் குரங்குகள் போல இந்த முகமற்ற குரலுக்கு ஏற்ப செயற்படுகிறார்கள். இறுதியாக, தாங்கள் எவ்வாறு மனோரீதியாக, செயல் ரீதியாக சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை கண்டு இந்தப் பெண்கள் ஆத்திரமடைகின்றார்கள். ஒரு கட்டத்தில் கட்டளைகளை ஏற்க மறுத்து அவர்கள் மூவரும் கிளர்ந்தெழுகிறார்கள். ஒருமித்த குரலில் தயாரிப்பாளரை நேரடியாக வெளியில் வருமாறு கூக்கிரலிடுகின்றார்கள். தயாரிப்பாளரோ, நெறியாளரோ வெளியே வரவுமில்லை, முகத்தைக் காட்டவும் இல்லை. இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், குறிப்பாக ரியலிட்டி ஷோ பற்றி என்னிடமிருந்த கருத்துக்கள் தலைகீழாக மாறிப்போயின.

இன்று எமது பிரதேசம் முழுவதும் விஜய் ரி.வி, கலைஞர் ரி.வி, எஸ்.எஸ் மியூசிக், ஷீ தமிழ் என்று கணக்கற்ற வகையில் தனியார் தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பகின்றன. எல்லாத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தற்போதைய போக்கு 'ரியலிட்டி ஷோ' போன்றவை தான். தயாரிப்பாளர்களால் மஜிக் செய்து பூர்த்தியாக்கப்பட்ட வடிவம் எங்களுக்கு ஒளிபரப்;பப்படுகிறது. இந்த மஜிக்கின் பின்புலத்தில் நடப்பது அனைத்தும் 'சுணைக்கேடு' நாடகத்தின் பாத்திரங்களான பெட்ராவுக்கும், மரேனுக்கும், லில்லிக்கும் நடப்பவைதான். விஜய் ரி.வி இல் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியைப்பாருங்கள். பதின்ம வயதின் ஆரம்பத்தைக் கூட எட்டாத பாலகர்கள் 'அற்புதமாக' பாடவைக்கப்படுகிறார்கள். வளர்ந்தவர்களே பாட கூச்சப்படும் விரசமான, விரகதாபமுடைய பாடல்களை அதே உணர்வுடன், அதே செய்கையுடன் பாடவைக்கப் படுகிறார்கள். அந்தச் சிறுவர்களின் குழந்தைத்தனம் எங்கே போனது?. தாய்மாரும், பாட்டிமாரும் ரசிக்கிறார்கள், ஊக்குவிக்கிறார்கள். தோற்கும் போது எதிர்காலமே இனி இல்லை என்பது போல் கதறுகிறார்கள். குழந்தைகள் போட்டியில் தோல்வியுற்று மேடையை விட்டு வெளியேறும் போது மிகுந்த மனச்சோர்வடைகிறார்கள். அழுகிறார்கள். ஏன்? எதற்கு? என்று தெரியாத வயதில் உச்சக்கட்ட போட்டி நடைபெறுகிறது. 'ஷி தமிழ்' தொலைக்காட்சியில் 'சொல்வதெல்லாம் உண்மை' என்ற நேரடிநிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. நான்கு சுவர்களுக்கிடையில் கணவனும் மனைவியும் மனம் திறந்து பேசி தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் முழு உலகுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது. கணவன் - மனைவி கைகலப்பு, மாமியார் - மருமகள் கைலப்பு, கணவன் - மனைவி ஒழுக்க மீறல்கள் எல்லாம் நிஜமாக முழு உலகுக்கும் காட்டப்படுகிறது. அந்தரங்க வாழ்வு என்ற ஒன்று இல்லாதவாறு சகலருமே சுரணையற்றவர்கள் ஆக்கப்படுகிறோம். மீடியாக்காரருக்கு தேவை பரபரப்பும்ஆரவாரமுமே. பரபரப்புக்கும் ஆர வாரத்துக்குமாய் எல்லோரும் விலை போகிறோம் என்று 'சுணைக்கேடு' நாடகத்தைப்பார்த்ததன் பின்னர் தனது ஊடகங்கள் மீதான கோபத்தை தெரிவித்திருந்தார் கிருஷ்ணகுமார். மேலும் அவர் குறிப்பிடும் போது,பல்வேறு விடயங்கள் 'சுணைக்கேடு' என்ற நாடகத்தில் என்னைக் கவர்ந்தன. மேடை அமைப்பும், இசையும் மிகச்சிறப்பானதாக இருந்தன. வீடியோக் காட்சியுடன் இணைந்த புதிய வடிவம் பார்வையாளரை கவரக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது.'

++++

இதே போன்று இந்த நாடகத்தைப் பார்த்த நாடகர் சண்முகம் முத்துலிங்கம் பின்வருமாறு தனது எண்ணங்களைப்பதிவு செய்திருந்தார்,

'சுணைக்கேடு' நாடகத்தில் மூன்று இளம் பெண்களும் தம்மை மட்டுமே முதன்மைப்படுத்துவதற்காக - மிருகத்தனமாக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதைக்காட்டும் நாடகாசிரியர், உடனடியாகவோ அல்லது சிறிது போது கழித்தோ அவர்கள் தங்கள் செயல்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பதாகவும் காட்டுகிறார். மூன்று பெண்களின் போட்டித்தன்மையைத் தூண்டியும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அல்லல்களைப் புட்டுக்காட்டியும், அவர்களை நிதானமிழக்கச் செய்வதன் மூலம் அவர்கள் தாங்கள் சொல்ல விரும்பாத விடயங்களை வெளிக்கொண்டு வரவும் புறக்குரல் இயங்குகிறது. இதன் மூலம் அந்த பெண்களின் அவலங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அல்லலுற்று வாழ்கின்ற, வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து விரக்தியுடன் வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்ற இளைஞர்கள், போலிப்பகட்டுள்ள தொலைக்காட்சி, திரைத்துறை, விளம்பர உலகில் தாங்கள் சேர்ந்து விட்டால் வாழ்வே சொர்க்கம் என்று எண்ணிச் செயற்படுவதையும் இந்த நாடகம் தெளிவாகக் காட்டுகிறது.

சண்முகம் முத்துலிங்கம் குறிப்பிட்ட அத்தனை விடயங்களையும் 'பிக்பொஸ்' நிகழ்ச்சியில் பார்த்திருக்கின்றோம். 'பிக்பொஸ் சீசன் 3' பங்கு கொண்ட அனேகர் அதில் பங்கு கொண்டால் தமக்கு சொர்க்கம் கிடைத்து விடும் என்று எண்ணினார்கள்.

இந்த நாடகத்தின் கதாபாத்திரங்களாக நடித்திருப்பவர்கள் அனோஜா, மரீன், துவாரகி மூவருமே தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்துள்ளனர்.

இவர்கள் புதுமுக நடிகைகள் என்று பார்க்கையில் அவர்களுடைய நடிப்புப் பாராட்டப்பட வேண்டியதுதான். மேலைத்தேய இசைக்கேற்ப நடன அசைவுகள் செய்ய வேண்டிய சவாலை அனோஜா சமாளித்து வெற்றி கண்டுள்ளார். அசரீரியாக இயங்கிய தேவானந்த் நாடகத்தை முன் நகர்த்துகிறார். சந்தர்ப்பத்துக்கேற்ப கண்டிப்பு, எள்ளல், இணக்கம் முதலிய தொனிகளை அவர் குரல் வெளிப்படுத்துகிறது என்று 'சுணைக்கேடு' நாடகத்தைப் பார்த்த கவிஞர் சோ.பத்மநாதன் தனது மனப் பதிவைப் பதிவு செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடிய உலகக் கவிஞர்களின் மாநாட்டில் ஈழத்து படைப்பாளிகளின் நூல்கள் வெளியீடு





கம்போடியாவின் சியாம் ரீப் நகரில் அண்மையில் இடம்பெற்ற இரண்டு நாள் உலகக் கவிஞர்கள் மாநாட்டில் ஈழத்துப் படைப்பாளிகள் இருவரது புதிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்தாளரும் கவிஞருமாகிய வெற்றிச்செல்வியின் குப்பி என்ற சிறுகதை நூலும், வீரகேசரியின் வவுனியா செய்தியாளரும், முன்னாள் பிபிசி தமிழோசையின் வடமாகாண செய்தியாளருமாகிய பி.மாணிக்கவாசகத்தின் 'வாழத்துடிக்கும் வன்னி' என்ற நூலுமே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

'குப்பி' சிறுகதை நூலை நூலாசிரியர் நிகழ்வில் கலந்து கொண்ட ஈழத்து கவிஞர்கள் படைப்பாளிகள் சார்பில் வெளியிட்டு வைக்க கம்போடிய அங்கோர் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் செயலாளர் ஆகியோர் நூலின்; பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

'வாழத் துடிக்கும் வன்னி' நூலை வவுனியாவைச் சேர்ந்த எழுத்தாளர் மேழிக்குமரன் அருந்தவராசா நிகழ்வில் கலந்து கொண்ட ஈழத்து கவிஞர்கள் படைப்பாளிகள் சார்பில் வெளியிட்டு வைக்க, தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செயலாளர் ஆகியோர் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

போர்க்கால வாழ்க்கையைப் பற்றிய 30 சிறுகதைகளை குப்பி சிறுகதைத் தொகுப்பு உள்ளடக்கி உள்ளது. வாழத் துடிக்கும் வன்னி என்ற நூல் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று மறுவாழ்வுக்காகத் துடிக்கும் ஏக்கம் நிறைந்த வன்னி மக்களின் வாழ்க்கை பற்றிய ஒரு பதிவாக வெளிவந்துள்ளது. (110)




## அர்ப்பணிப்பான அரச சேவையை மக்களுக்கு ஆற்றியவர் கணேஸ்

செல்வராஜா ரமேஷ்

அரச பணி என்பது இலகுவில் கிடைத்த விடும் பணியல்ல, அரசபணி கிடைத்தோர் அதனை முறையாக மேற்கொண்டு மக்களின் பேரபிமானத்தைப் பெற்று வாழ்க்கையில் பெரும் பேற்றைப் பெற்றுள்ளனர். பெரும்பாலானோர் அரசபணிக் காலத்தில் சேவைகளை முன்னெடுக்காது காலத்தை வீணாகக் கழித்து விட்டு இளைப்பாறுகின்றனர்.

பின்னர் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருகின்றனர். சிலர் சேவைக் காலத்தில் செய்யக்கூடாத தவறுகளை செய்து விட்டு செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அரச பணியைப் புனித பணியாகக் கொண்டு சேவையாற்றியவர்களின் பட்டியலில் பல அரச அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் இம் மண்ணுக்கு சேவையாற்றி இறையடி சேர்ந்துள்ளார்கள். அந்த வகையில் எம்கண்முன்னால் எம் மண்ணில் சேவை புரிந்த மாமனிதனை இந்த நாள்களில் நினைவு கூருகின்றேன். அவர்களில் ஒருவர் மறைந்த மாவட்டச் செயலர் க. கணேஸ்.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் மிகச் சிறந்த அரச பணியை இரவு பகல் பாராது அர்ப்பணிப்பான மக்கள் சேவைக்காக முன்னெடுத்தவர் கணேஸ் என்றால் மிகையாகாது. அவர் இறைவனடி சேர்ந்து இன்று பதினாறு மாதங்களைக்கடந்த நிலையிலும் அவரது ஒவ்வொரு பங்குபற்றுதலும், அபிவிருத்திச் செயற்பாடுகளும், மக்கள் சேவையும் மக்கள் முன் அவரைப் பறைசாற்றி நிற்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலராக கணேஸ் இருந்தபோது ஏ9 வீதி மூடப்பட்டிருந்தது. அத்துடன் பொருளாதார அபிவிருத்திகளும் இங்கு இல்லை. அந்தக் காலப்பகுதியில் மக்களின் தேவையறிந்து சேவையாற்றியதுடன் மக்களின் வாழ்வாதாரத்தில் அதாவது உணவு. மருந்து, எரிபொருள், மற்றும் இன்னோரன்ன தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி பஞ்சம், பசி. பிணி என்றில்லாத உன்னத நிலையைத் தனது பணிக் காலத்தில் ஏற்படுத்தியிருந்தார். இவ்வாறாக அரச சேவையில் பெரும் பணியாற்றி மக்கள் மனதை வென்ற அர்ப்பண சேவையாளன் இன்றும் மறைந்த பின் வாழும் மானிடனாக மக்கள் முன் நிறைந்து நிற்கின்றார்.




## வடக்கு மாகாணத்தில் சவாரி வீரனாக விவசாயிகளின் தந்தையாக செயல்பட்ட செயல் வீரன் பொன் – திருபாலசிங்கம்

திருபாலி எனவும் விவசாயிகளின் தந்தை எனவும் எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஏழைகளின் வள்ளலான பொன்னையா திருபாலசிங்கத்தின் சாவுச் செய்தி வடக்கு மாகாணத்தில் பலரைத் துயரத்தில் தள்ளிவிட்டுள்ளது.

வலிகாமத்தில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சங்குவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன். திருபாலசிங்கம் பிரபல விவசாயியாகவும் தேசிய ரீதியில் சவாரி வீரனாகவும் செயல்பட்டதுடன் நாடு தழுவிய ரீதியில் இடம்பெறும் சவாரிப்போட்டிகளில் ஈடுபட்டு விருதுகளை யும் பதக்கங்களையும் வென்ற பெருமைக்கு உரியவர்.

தனது விவசாய நண்பர்களையும், சக தோழர்களையும் போட்டிகளில் இணைத்து செயல்படுத்திய தோழனாகவும் சமூகத்திற்கு உழைத்த உன்னத நபராகவும் விளங்கியவர் மறைந்த வீரன் திருபாலசிங்கம் என்றால் மிகையாகாது.

மறைவுக்கு முன்னர் வடக்கில் பல்வேறு சமய, சமூக, கமம் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் அர்ப்பணித்து சமூகத்துக்கு ஆற்றிய சேவைக்காக உடுவில் பிரதேச செயலகத்தின் கலை கலாசார பிரிவினரால் ஞான ஏந்தல் விருதும்-சிறப்புப்பட்டமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். சங்குவேலி பூவரசம் பகுதியில் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தை நிறுவியவராகவும், அண்மையில் பிரமாண்டமான முறையில் மகாகும்பாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேகம் என்பவற்றை முறையாக நடத்தியதுடன் 'அதற்கான சிறப்பு மலரையும் வெளியிட்ட செம்மலாக மறைந்த சமூக ஆர்வலர் பொன் திருபாலசிங்கம் விளங்கினார். அவரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியாதமிழ்ச்சங்கத்தின் மாதாந்த சிந்தனை அரங்கம்




வவுனியாதமிழ்ச்சங்கத்தால் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் சிந்தனை அரங்கம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

'ஆயுர்வேதம்' எனும் தலைப்பில்நடைபெற்ற அரங்கத்தில்துறைசார்ந்த வல்லுநர்கள் சிறப்புரை ஆற்றினர். சிந்தனையரங்கின்தொடக்கவுரையை தமிழருவித.சிவகுமாரன்ஆற்றினார். அதனைத் தொடர்ந்து 'ஆயுர்வேதம் ஓர் அறிமுகம்' என்றபொருளில் மருத்துவர்க.சிவராசாவும், 'ஆயுர்வேதமும் ஏனைய வைத்திய முறைகளும் ஓர் ஒப்பீடு'என்னும்பொருளில்மருத்துவர் ஏ.ஜே.ரம்ஸானும், 'சித்தமருத்துவமும் தமிழர்கலாசாரமும்'என்றபொருளில் வைத்தியர் மா.போதபாரியும் உரையாற்றினர்.

கம்போடியாவில் இடம்பெற்ற உலகக் கவிஞர்கள் மாநாட்டில் இலக்கியத்துறைக்காக ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி கம்போடிய அரசால் விருது பெற்ற, கவிஞர் மேழிக்குமரன் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டார். நிகழ்வில் நகரசபை உபதவிசாளர் சு.குமாராசாமி, உறுப்பினர்களான ரி.கே.ராஜலிங்கம், த.பரதலிங்கம், மூத்த விரிவுரையாளர்ந.பார்த்திபன், வடக்குமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ம.தியாகராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-110)

# சமாதான நீதிவான்கள்



ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர்கள் சமாதான நீதிவான்களாக நேற்றுமுன்தினம் பதவியேற்றனர். ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் தலைமை நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் முன்னிலையில் அவர்கள் பதவியேற்றனர். (154)



யாழ்ப்பாணம்கொட்டடியைச் சேர்ந்த லயன்பெ.திருச்செல்வன்யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அண்மையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாகப் பதவியேற்றார். (9)



# கவிதைச் சிற்றிதழ் அறிமுக விழா

நீங்களும் எழுதலாம் கவிதைச் சிற்றிதழ் அறிமுக விழா திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச்சங்கமண்டபத்தில்நீங்களும்எழுதலாம்ஆசிரியர்கவிஞர்எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



# பிரதீபா பிரபா விருது

அதிபர்கள் ஆசிரியர்களுக்கான பிரதீபா பிரபா விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வைதீஸ்வராக் கல்லூரியின் அதிபர் திரு[illegible] ஆசிரியர்களான நா.மதியழகன், ந.உருத்திரசிங்கம் ஆகியோர் இந்த விருதை பெற்றுள்ளனர். (63)





# வவுனியாவில் தண்ணுமைப்பிரவாகம்

வவுனியாத் தமிழ்ச் சங்கமும் நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்களும் இணைந்து வழங்கிய 'தண்ணுமைப் பிரவாகம் 2019' நிகழ்ச்சி, வவுனியா கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தி னராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவு னியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலைய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ல.அம்பிகை பாகன், வவுனியா நகரசபையின் செயலாளர் இ.தயாபரன், வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் [illegible] பீடாதிபதி ச.சிதம்பரநாதன், வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி. நாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

see more news in NEWUTHAYAN.COM

# ஏவுகணைச் சோதனைகள் குறித்து ஐ.நாவில் விவாதிக்க வேண்டாம்

## எச்சரிக்கிறது வடகொரியா



நியூயோர்க்,ஒக்.9
வடகொரியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பாகவும் அதற்காக தாங்கள் தயாரிக்கின்ற ஏவுகணைகள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபையில் விவாதிக்கக் கூடாது என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளை எச்சரித்தது வடகொரியா.


அமெரிக்காவில் உள்ள வடகொரியாவுக்கான தூதர் கிம் சொங் கடந்த திங்கள் கிழமை இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், மற்றைய நாடுகளைத் தூண்டிவிடுகிறது அமெரிக்கா என்பது எங்களுக்குத் தெரியும். எங்கள் நாட்டின் பாதுகாப்பையும், இறையாண்மையையும் பாதுகாப்பதற்காக நாங்கள் மேற்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கைகளை யாராவது ஐக்கிய நாடுகள் சபையில் விமர்சித்தால் அது நிலமையை மேலும் மோசமாக்கும். அதனால் நாங்கள் ஏவுகணைகள் தயாரிப்பதை விடுத்து வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். இந்த விவகாரத்தில் மூன்று ஐரோப்பிய நாடுகளும் பொறுமை காக்க வேண்டும், எங்களது தற்காப்பு நடவடிக்கைகளை ஒரு விவகாரமாக முன்னெடுத்தால், வடகொரியா அரசு அமைதியாக இருக்காது என்றார்.

2017 ஆம் ஆண்டு அணுசக்தி சோதனை மற்றும் நீண்ட தூர ஏவுகணைச் சோதனை நடத்தியதை அடுத்து ஐரோப்பிய நாடுகள் வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. சிறிய ரக மற்றும் இடைநிலைத் தூர ஏவுகணைகளை அண்மைக்காலமாக அதிகளவில் சோதனை செய்தது வடகொரியா. கடந்த வாரம் கடலுக்குள் அது புதிய சக ஏவுகணையை ஏவியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2019 நோபல் அறிவிப்பு!

# இயற்பியல், மருத்துவ துறைகளுக்கான பரிசுகள் 3 பேருக்கு பகிர்வு!

ஸ்டொக்ஹோம்,ஒக்.9
மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி மதிப்புறுத்தப்படுவது வழக்கம். இந்த நிலையில், 2019ஆம் ஆண்டுக்கான இயற்பியல், மருத்துவத் துறைகளுக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் அறிவிக்கப்பட்டது.




அதன்படி கனடாவைச் சேர்ந்த ஜேம்ஸ் பீப்ள்ஸ், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மைக்கல் மேயர் மற்றும் திதியர் க்யூலோஸ் ஆகிய விஞ்ஞானிகள் இந்த ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். சூரியக் குடும்பத்துக்கு வெளியே உள்ள கோள்கள் குறித்த ஆய்வுகளை இவர்கள் மேற்கொண்டிருந்தனர். அத்தோடு உடல் செல் (கலம்) குறித்து ஆய்வு மேற்கொண்ட 3 ஆய்வாளர்களுக்கு மருத்துவத்துக்கான நோபல் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த 2 ஆய்வாளர்களுக்கும், பிரிட்டனைச் சேர்ந்த ஒரு ஆய்வாளருக்கும் என இந்தப் பரிசும் 3 பேருக்கு அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் வில்லியம் காலின், கிரேக் செமென்ஸா, பிரிட்டனைச் சேர்ந்த பீட்டர் ராட்கிளிவ்ப் ஆகியோருக்கே மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து வேதியியல், இலக்கியம், அமைதி ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்படவுள்ளன.

# காஷ்மீரில் தகவல் தொடர்பு முடக்கம்

## அமெரிக்க நாடாளுமன்றில் எடுத்துரைப்பு!

வோஷிங்டன்,ஒக்.9
இந்தியாவின் ஆளுகைக்குள் உள்ள ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் 2 மாதங்களுக்கு மேலாக நீடித்துவரும் தகவல் தொடர்பு முடக்கத்துக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று அமெரிக்க நாடாளுமன்றக்குழு வலியுறுத்தியது.

காஷ்மீர் மாநிலத்தின் அரசமைப்பில் மாற்றம் செய்ததோடு காஷ்மீரை இரண்டு பிரதேசங்களாக அறிவித்த இந்திய அரசு அங்குள்ள மக்களை ஒடுக்கி வருகிறது.

அங்கு கடுமையான கட்டுப்பாடுகள், பொலிஸ் தடை உத்தரவு, ஊரடங்கு உத்தரவு போன்றவை விதிக்கப்பட்டுள்ளன. கைபேசி இணைப்புகள், இணையச் சேவை உள்ளிட்டவை முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து காஷ்மீரில் தகவல் தொடர்பு சாதனங்கள் முடக்கப்பட்டுள்ள விவகாரத்துக்குத் தீர்வுகாண வேண்டும்.

அங்கு மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

# கவிழ்ந்தது அகதிகள் படகு ; 13 பெண்கள் பரிதாபச் சாவு!

துனிசியாவில் அகதிகள் பயணித்த படகு ஒன்று கடலில் கவிழ்ந்ததால் 13 பெண்கள் பரிதாபமாகச் சாவடைந்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

துனிசியாவிலிருந்து 50 பேருடன் மத்திய தரைக்கடல் வழியாகப் பயணித்த அகதிகள் [illegible] அங்குள்ள லம்பேடுசா தீவை நெருங்கியபோது, மோசமான வானிலை காரணமாகக் கடல் அலையில் சிக்கிக் கவிழ்ந்தது. இதில் 13 பெண்கள் [illegible] அறிந்த இத்தாலிக் கடற் படையினரால் 22 பேர் மீட்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** பரந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதியவர்களின் அன்பு கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சாதக சூழ்நிலைகளை அறிந்து கொள்வது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம்.

**மிதுனம்:** மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும். உணவு பொருள் தரம் அறிந்து உண்ணவும்.

**கடகம்:** உங்களின் இன்ப, துன்பம் பிறர் அறியாத வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய திட்டம் உருவாகும். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** இஷ்ட தெய்வ அருளால் மனதில் இருந்த சஞ்சலம் தீரும். அதிக உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். உபரி பணவரவில் கொஞ்சம் சேமிப்பு அதிகரிக்கும்.

**கன்னி:** செயல்களில் தேவையான சீர்திருத்தம் வேண்டும். பொறாமை உள்ளவரின் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் நிலுவை பணி நிறைவேற்றுவது நல்லது. பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** அறிமுகமில்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும் . பணவரவு சுமாராக இருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**விருச்சிகம்:** கடந்த கால நற்செயலுக்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**தனுசு:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத சிறு குறுக்கீடு வரலாம். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு அவசியம்.

**மகரம்:** சிறிய செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி நிலை உருவாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கும்பம்:** நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படுவது நல்லது. கொஞ்சம் பண கடன் பெறுவீர்கள்.

**மீனம்:** உறவினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணிகளை புதிய யுக்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். உபரி பணவரவு பெறுவீர்கள்.

## தமிழர்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
முல்லைதீவு சம்பவம் தொடர்பாக இப்போது நாடாளுமர்ந்தில் பேசப்படுகின்றது. நல்லிணக்க அடிப்படையில் பௌத்த சிங்கள மக்கள் செயற்பட்டு வருகின்றனர். வடக்கில் சில இடங்களில் பௌத்த தேரர்கள் தொடர்பாகப் பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன. வெள்ளையர்கள் ஆட்சியில் கூட ஆலயங்களில் அவர்கள் கைவைக்கவில்லை. இந்த இடத்தில் தேரர் வாழ்ந்துள்ளார். போர்க் காலத்தில் அவர் இடம்பெயர்த்திருக்க முடியும். ஆனால் இந்த இடத்தில் அவர் வாழ்ந்தார். சிங்கள மக்கள் விட்டுக்கொடுப்புடன் தெற்கில் வாழ்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களை ஒருபோதும் நிராகரிக்கவில்லை. கம்பளையை எடுத்துக் கொண்டால் அங்கு முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் நிலங்கள் விகாரைக்கு சொந்தமானவை. அதுபோலவே வடக்கிலும் விகா ரைக்கு உடைய இடங்கள் உள்ளன. ஆனால் தமிழர்களை அங்கிருந்து நாம் விரட்டவில்லை.

பல சந்தர்ப்பங்களில் தமிழர்களைச் சிங்களவர்கள் பாதுகாத்துள்ளனர். நீதிமன்ற தீர்ப்பு இருக்கலாம், நீதிமன்ற தீர்ப்பு பெரும்பாலும் பொலிசாரின் தகவல்களுக்கு அமையவே வழங்கப்படும். பொலிஸார் கொண்டுவரும் தகவல்கள் சரியாக இருக்கும் என்று அர்த்தம் இல்லை .கோத்தபாய ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் கைவிடப்பட்டுள்ளன. இதுவும் அவ்வாறானதே.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு தேரர்களின் தலைமைகளுக்கு இடமளிக்க வேண்டும். அவ்வாறு செயற்பாட்டால் பிரச்சினைகள் இருக்காது. இந்த நிலப் பிரச்சினையைத் தேரர்களிடம் விட்டிருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்காது. இந்தப் பிரச்சினை வளரத் தமிழ்த் தரப்பே காரணம். நீங்கள் பேசாது இருந்திருந்தால் ஒரு பிரச்சினையும் வந்திருக்காது. நீங்கள் செய்த செயலால் தெற்கில் மக்கள் மத்தியில் பெரும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. அந்தத் தேரர் இறந்தால் அங்கு இறுதிக் கிரியைகள் செய்ய வேண்டும்.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு மிகவும் மோசமாக நடந்துகொண்டுள்ளது. இங்கு கொழும்பில் சிங்கள மக்களுடன் வாழ்ந்துகொண்டு இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்துவது தவறானது - என்றார். (எ-22,31)

## பொதுச்...

ஆண்டு தொடக்கம் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றது. இந்தக் கண்காணிப்புப் பணிகள் முக்கியமாக பொதுச் சொத்துக்களை மையப்படுத்தியதாகும். இந்தமுறை அரச தலைவர் தேர்தலில் பொதுச்சொத்துக்கள் முறைகேடு தொடர்பில் 25 மாவட்டங்களுக்கும் தனித்தனியான கண்காணிப்பாளர்களும், 180 தேர்தல் கண்காணிப்பாளர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும், அரச அலுவலர்களும் தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். 2141/52 என்ற இலக்கமிடப்பட்ட சிறப்பு அரசிதழ் அறிவித்தல்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு வலியுறுத்தியிருக்கிறது.

(எ-22,31)

## அரசியல்...

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அனைத்து இன மக்களின் ஆதரவையும் பெற்றே நாட்டின் தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும். தனிப் பௌத்த, சிங்கள வாக்குகளை மாத்திரம் பெற எதிரணியினர் முயற்சிக்கின்றனர் என்று ஆளும் தரப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர்.

2015ஆம் ஆண்டு தமிழ் மக்களின் மத்தியில் கடந்த அரசு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தவறான சித்தரிப்புக்களையே முன்னெடுத்தது. இதுவே ஆட்சி மாற்றத்திற்கான முதன்மைக் காரணியாக அமைந்தது. தமிழ் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக எதையும் நிறைவேற்றவில்லை.

வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வும், மலையக மக்களுக்கு நியாயமான சம்பளமும், உட்கட்டமைப்பு விருத்தியும் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. அரசியல் தீர்வு வடக்கு மக்களின் தேவையாகக் காணப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவையாகக் காணப்பட்டது. அபிவிருத்தி தொடர்பில் கருத்துரைத்தால், அரசியல் தீர்வு செயலிழக்கப்படும் என்பதே கூட்டமைப்பின் கருத்தாகக் காணப்பட்டது. ஆகையால் அவர்கள் வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு ஒருபோதும் கவனம் செலுத்தவில்லை.

அரசியல் தீர்வு இனங்களுக்கிடையில் மீண்டும் பிளவையே ஏற்படுத்தும். தமிழ் மக்களை பகடைக்காயாகக் கொண்டு தமிழ் தலைவர்கள் முன்வைக்கும் நிபந்தனைகள் பொருத்தமற்றது. எனவே தமிழ் மக்களின் ஆதரவை மாத்திரம் கோருகின்றோம்.

அரசில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பினர் உட்படத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் செலுத்தவில்லை. தமிழ் மக்கள் இந்தமுறை அரசியல் ரீதியில் தனித்த தீர்மானங்களையே முன்னெடுக்க வேண்டும். போலியான அரசியல் பரப்புரைகளுக்கு ஏமாற வேண்டாம்- என்றார். (எ-22,31)

## இன...

துக்குள் சர்ச்சைக்குரிய வகையில் விகாரை அமைத்துத் தங்கியிருந்த பிக்கு கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது உடலை ஆலய வளாகத்துக்குள் தகனம் செய்யக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிமன்று வழங்கிய கட்டளையை மீறி, ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகே உடல் தகனம் செய்யப்பட்டது. கொழும்பில் இருந்து வந்திருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் இந்தச் செயலை முன்னெடுத்திருந்தனர். அதன்போது நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரும், தமிழர் மரபுரிமைப் பேரவையினரும் இணைந்து கடந்த 25ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தனர்.

அது தொடர்பாக நேற்று வவுனியா பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணை நடைபெற்றது. அதில் முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நீராவியடிச் சம்பவத்தில் நீதிமன்ற உத்தரவுடன் நடவடிக்கை எடுப்பதற்கு முல்லைத்தீவுப் பொலிஸார் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியாப் பிராந்திய இணைப்பாளர் ஆர்.பிரியதர்சன் தெரிவித்தார்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய விடயம் தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் எமக்கு வழங்கப்பட்டன. பிக்குவின் உடலை எரித்தமை, பொலிஸார் பொது மக்களைத் தாக்கியமை, நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமை என்ற முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்தன.

இன்று (நேற்று) விசாரணை நடத்தப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாதமையைப் பொலிஸார் ஏற்றுக் கொண்டனர். பொலிஸார் பொதுமக்களைத் தாக்கியமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் நடவடிக்கை எடுக்கத் தயார் என்று கூறினார்கள். இந்த விடயத்தில் சட்டவிரோதமாகச் செயற்பட்டவர்களுக்கு நீதிமன்ற உத்தரவுடன் மேலதிக நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர் என்றும் பிராந்திய இணைப்பாளர் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற விசாரணைகள் தொடர்பாக ஆலய நிர்வாகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ந.அனிஸ் தெரிவித்ததாவது:
அன்று நடைபெற்ற சம்பவத்தில் நீதிமன்றின் கட்டளை மீறப்பட்டுள்ளது என்று எம்மால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதைப் பொலிஸ் தரப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. அன்று நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதைவிட இன முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டது என்று அவர்கள் கூறியுள்ளனர். நீதிமன்றக் கட்டளையை மீறியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அன்று அங்கிருந்த பௌத்த தேரர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர் என்றார்.

நேற்று நடைபெற்ற விசாரணைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்ததாவது:
அந்தச் சம்பவத்தின்போது மக்கள் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லை என்றும், தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான காணொலிப் பதிவுகளைத் தந்தால் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டோம். தகுந்த ஆதாரம் தந்தால் நடவடிக்கை எடுப்போம் என்று அவர்கள் உறுதியளித்தனர்.

நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதைப் பொலிஸார் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் நழுவிச் செல்லும் போக்குடன் காணப்படுகின்றனர்.

ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்த தகன நடவடிக்கைகளை அவர்கள் உடனடியாக மேற்கொண்டதால் தம்மால் தடுக்க முடியவில்லை என்று பொலிஸார் கூறினார்கள். நாம் அதை மறுத்தோம். பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கையாலேயே இது நடைபெற்றது. தகன நடவடிக்கைகளை சிங்கள மக்களும், பௌத்த தேரர்களும் மேற்கொண்டபோது காலை 10 மணி முதல் 12.30 மணிவரை பொலிஸார் வேடிக்கை பார்த்ததுடன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கியிருந்தனர் என்று நாம் சுட்டிக்காட்டினோம். நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை எதுவும் செய்யக்கூடாது என்று கூறி அவர்களைத் தடுக்காது பொலிஸார் கைகட்டி நின்றமை தொடர்பாக நாம் மனித உரிமை ஆணைக்குழுவில் சுட்டிக்காட்டினோம். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்.

சட்டத்தை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். சட்டத்தை மீறிய பொலிஸார், அவர்களை விசாரணை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சுட்டிக்காட்டிய நாம், வேறு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் இந்த விடயத்தில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் கூறினோம். மனித உரிமை ஆணைக்குழு இந்த விடயங்களைச் செவிமடுத்தது. என்றனர்.

முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் உயர் அதிகரிகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகினர். (எ-110)

## முல்லை. ...

இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முல்லைத்தீவு, நீராவிடியடிப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலய வளாகத்துக்குள், நீதிமன்ற உத்தரவை அவமதித்து பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமை தொடர்பில் சிறப்புக் கூற்றை முன்வைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு, செம்மலை நீராவியடி ஏற்றம் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயம் புராதனமிக்கது. அங்கு 2004 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேதாலங்கார கீர்த்தி என்ற பௌத்த பிக்கு ஒருவரால் குருகந்த புராண ராஜ மகா விகாரை என்ற பெயரில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டது. அப்போது அந்தப் பகுதி மக்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இது தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் விகாரை கட்டும் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

சம்பந்தப்பட்ட பௌத்த பிக்கு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பில் உயிரிழந்தார். அவரது பூதவுடலை முல்லைத்தீவு செம்மலை நீராவியடி ஏற்றம் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயக் காணியில் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அந்தப் பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நீராவியடிப் பிள்ளையார் ஆலயக் காணியில் பிக்குவின் உடலை தகனம் செய்யக் கூடாது என உத்தரவிட்டது.

ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு குற்றம் ஒன்றிற்காக சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து அரச தலைவரின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை பெற்ற கலபட அத்தே ஞானசார தேரர் கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்து நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி அவரது ஆதரவாளர்களுடன் அந்த இந்து கோயிலுக்கு அருகில் பௌத்த தேரரின் உடலை தகனம் செய்தார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்துச் செயற்பட்ட அவருக்கு எதிராக அரசு இரு வாரங்கள் கடந்த நிலையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பௌத்த தேரரின் இறுதிக் கிரியையின் போது அங்கு சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய பொலிஸ் அதிகாரிகள் அதைச் செய்யாமல் மௌனம் காத்தனர். இந்த செயற்பாடுகளின் போது அங்கு சமூகமளித்திருந்த ஆலயத் தலைமைக் குரு மற்றும் சட்டத்தரணிகள் கூடத் தாக்கப்பட்டுள்ளனர்.

அங்கு குழுமியிருந்த பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டவர்களை தடுக்கத் தவறி விட்டனர். இது இந்து மக்களின் உரிமையை மீறும் செயல். இதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் கூற்றுக்கு அடுத்த நாடாளுமன்ற அமர்வில் பதில் வழங்கப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

(எ-22,31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஒக்.9
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சூப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்,ஒக்.9
மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்ததும் எடிசன் சுற்றுக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். லூட்சியா பாடசாலை அணியை எதிர்த்து பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்லையன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தழிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நசேரத் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துமுல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்குக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



# சித்தி விநாயகர் வி.க. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக.9
யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழகம் மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரில் ஆனைக் கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நாவலி தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை புள்ளிகளாக மாற்ற முதல் பாதி ஆட்டத்தில் 7:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி. இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆட்டத்தை வேகப்படுத்தியது ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் அணி. ஆட்டத்தில் மேலதிகமாக 5 புள்ளிகள் பெறப்பட்ட நிலையில் ஆட்டம் 8:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



# தாவடிகாளி அம்பாள் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக.9
யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழகம் மின் ஒளியில் நடத்திய 20 வயதுக்குட்பட்டோருக்கான தாச்சி தொடரில் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 4 புள்ளிகளைப் பதிவு செய்ய முதற்பாதி ஆட்டம் சம நிலையில் முடிவைடந்தது.
இரண்டாவது பாதி ஆட்ட முடிவில் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மேலும் 3 புள்ளிகளைப் பெற்றது. சங்காணை கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி எதுவித புள்ளிகளையும் பதிவு செய்யாது போக ஆட்ட நேரம் முடிவில் 7:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
ஆட்ட நாயகனாக தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வீரர் டான்சன் தெரிவானார், சிறந்த தாச்சியாக சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் பவித்திரன் தெரிவு செய்யப்பட்டார். (23)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு

## துடுப்பாட்டம், வலைப்பந்தாட்ட போட்டிகள் நாளை

வவுனியா, ஒக்.9
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு வலய ஆசிரிய ஆலோசகர் சங்கம் நடத்தும் வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரியர்களுக்கான துடுப்பாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் தலைவர் அ.அமலேஸ்வரன் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுநர் தே.அமலன் மதிப்புறு விருந்தினராக சுசீலன் பவுண்டேஷன் இலங்கை தலைவர் ஏ.பரமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (422)

## மதிப்பளிப்பு நிகழ்வு



நிப்போன் கென்சென் காய் தோ கராத்தே சம்மேளனத்தால் மூத்த கராத்தே ஆசிரியர் மா. இரத்தினசோதி பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.
இந்த நிகழ்வு வவுனியா பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நிப்போன் கென்சென் காய் தோ கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டித் தொடரின் பரிசளிப்பு நிகழ்வின் போது மதிப்பளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ராஜபக்சவின் அதிரடியில்*

# லாகூரில் சிங்கங்கள் மீண்டும் கர்ச்சிப்பு




35 ஓட்டங்களால் பாகிஸ்தானை வீழ்த்தி மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது இலங்கை அணி.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமான ரி-20 தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பெர்னாண்டோ, குணதிலக களமிறங்கினர். குணதிலக சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய போதும் இமாட் வாசிமின் பந்து வீச்சில் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வந்தார் ராஜபக்ச. பெர்னாண்டோவும் தேவையற்ற ரன்அவுட் முறையில் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் மறு முனையில் ராஜபக்ச அதிரடி காட்ட ஆரம்பித்தார். அவர் பாகிஸ்தான் அணியின் பந்துகளை துவம்சம் செய்தார். அவருடன் ஜெயசூரியவும் இணைந்து கலக்கினார். ஜெயசூரியாவும் எதிர்பாராத விதமாக ரன்அவுட் முறையில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ராஜபக்ச 6 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 77 ஓட்டங்களைக் குவித்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி வீரர்கள் தேவையற்ற ரன்அவுட்களை தவிர்த்திருந்தால் இன்னும் ஓட்டங்களை அதிகரித்திருப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டது.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே பிரதீப், ரஜித அதிர்ச்சியைக் கொடுத்தனர். அணி 52 ஓட்டங்களைப் பெற்ற போது 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது. இலங்கை அணி பந்து வீச்சாளர்கள் மிகத் துல்லியமான முறையில் பந்து வீசியதைக் காணக் கூடியதாக இருந்தது. பாகிஸ்தான் அணியின் அதிகமான இலக்குகள் போல்ட் செய்யப்பட்டே ஆட்டமிழப்பு செய்யப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அணியில் அதிகபட்சமாக இமாம் வாசிம் மட்டுமே 47 ஓட்டங்களைப் பெற்றார். அணி 19 பந்துப்பரிமாற்றங்களில் 147 ஓட்டங்களைப் பெற்ற போது சகல இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது தனது சொந்த மண்ணில்.



பந்து வீச்சில் பிரதீப் 4 இலக்குகளையும், சில்வா 3 இலக்குகளையும், உதானே இலக்குகளையும் அதிகபட்சமாக கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இலங்கை அணி வீரர் ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டார்.



## உலக குத்துச் சண்டையில் மேரிகோம் காலிறுதிக்குள்

11 ஆவது பெண்கள் உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் மேரிகோம் 5:0 என்ற கணக்கில் தாய்லாந்து வீராங்கனையை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

11 ஆவது பெண்கள் உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி ரஷ்யாவின் உலன் உடே நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் 51 கிலோ உடல் எடைப்பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் 6 முறை சம்பியனான இந்தியாவின் மேரிகோம், தாய்லாந்து வீராங்கனை ஜுதாமா ஜிட்பாங்குடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மேரிகோம் 5:0 என்ற கணக்கில் தாய்லாந்து வீராங்கனையை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

*3 ஆண்டுகளின் பின்னர்*

## ஆஸி. ரி-20 அணியில்ஸ்மித்

ஆஸ்திரேலியாவில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகும் முத்தரப்பு ரி-20 தொடரில் ஆஸ்திரேலிய அணியில் மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்டீவ் ஸ்மித் இணைக்கப்பட்டுள்ளார். அதேசமயம், அதிரடி சகலதுறை ஆட்டக்காரர் மார்க் ஸ்டாய்னிஸ் நீக்கப்பட்டுள்ளார்.




ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொள்ளும் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் முத்தரப்பு ரி-20 தொடரில் விளையாட உள்ளன. ஆஸ்திரேலிய அணி இலங்கையுடன் இந்த மாதம் 27ஆம், 30ஆம் மற்றும் நவம்பர் முதலாம் திகதிகளில் ரி-20 போட்டிகளில் விளையாடுகிறது

அதன்பின் நவம்பர் 3ஆம், 5ஆம் , 8ஆம் திகதிகளில் ஆஸ்திரேலியா அணியுடன் மோதுகிறது பாகிஸ்தான். இந்த தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் உலகக் கிண்ணத்தில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சகலதுறை ஆட்டக்காரர் மார்கஸ் ஸ்டாய்னிஸ் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக முன்னாள் அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் இணைக்கப்பட்டுள்ளார். ஸ்மித் இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு மொஹாலியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ரி-20 போட்டியில் விளையாடினார். அதன்பின் ஆஸ்திரேலிய அணியில் ரி-20 போட்டியில் இடம் பெறாமல் இருந்து ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகளுக்குப்பின் இடம் பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியா அணி விவரம்:

ஆரோன் பிஞ்ச்(அணித் தலைவர்), ஆஷ்டன் அகர், ஆலெக்ஸ் கேரி, பாட் கம்மின்ஸ், கிளென் மக்ஸ்வெல், பென் மெக்டார்மாட், கேன் ரிச்சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், பில்லி ஸ்டான்லேக், மிட்ஷெல் ஸ்டார்க், ஆஷ்டன் டர்னர், ஆன்ட்ரூ டை, டேவிட் வார்னர், ஆடம் ஜம்பா.

### அணி வீரர்களுக்கு கோக்லி பாராட்டு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றது. இது குறித்து அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில்;

துடுப்பாட்டத்துக் குச் சாதகமான இந்த ஆடுகளத்தில் நமது சுழற்பந்து வீச்சாளர்கள் முதல் இன்னிங்சில் கொஞ்சம் அதிகமாக ஓட்டங்களைக் கொடுத்தனர். ஆனால் இந்த ஆடுகளத்தில் 2ஆவது இன்னிங்சில்தான் பந்துவீச்சாளர்களின் தாக்கம் இருக்கும் என்பது தெரியும். கடினமான இந்த ஆடுகளத்தில் சாதித்த பந்துவீச்சாளர்கள் பாராட்டுக்கு உரியவர்கள் - என்றார்.



## குருநகர் பாடும்மீன் வி.க.அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம், ஒக்.9

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் மாவட்ட மட்ட போட்டித் தொடரில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது. யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 1:0 என்ற கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை



**யாழ்ப்பாணத்தில் இயங்கும் ES பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு** (Kord Machine) **இயந்திர இயக்குனர், உதவியாளர் தேவை.**
ஆர்வம் உள்ளவர்கள் இன்றும். நாளையும் கீழ் உள்ள முகவரிக்கு தங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**ES பிரிண்டர்ஸ்**
**இல.357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## 100% புலமைப்பரிசில்

முற்றிலும் இலவசமான தகவல்தொழிநுட்ப பயிற்சிநெறி

UKI

Apply Now For Batch 6

**மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?**
**அல்லது**
**ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?**

| | |
|---|---|
| பயிற்சி நிலையம் | : யாழ்ப்பாணம் |
| பயிற்சிக்காலம் | : 6 மாதங்கள் ( நவம்பர் 2019 – மே 2020) |
| விண்ணப்ப இறுதித்திகதி | : 11 அக்டோபர் 2019 |

For Further Info & Application Package

www.uki.life info@uki.life 0775694587


# காலபந்து ஆடினார் டோனி

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வில் இருக்கும் இந்திய இலக்குக் காப்பாளர் டோனி மும்பையில் ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸுடன் சேர்ந்து காட்சிக் கால்பந்து போட்டி ஒன்றில் ஆடி ரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்தினார்.



சென்னையின் கால்பந்து கழகத்தின் உரிமையா ...ர்க ஆ... ஒரு... வரான டோ...ி அவ்வப்போது காட்சிக் கால்பந்து போட்டிகளில் ஆடுவது வழக்...ம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

டோனி இன்னும் சிலகாலம் கிரிக்கெட்டிலிருந்து விலகியிருப்பார் என்றும் பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடருக்கும் அவர் திரும்பமாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## நினைவு கூருகிறோம்



எமது ஆசிரியை **திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்** அவர்களது கணவர்
**அமரர்**
**ஆ.இராமச்சந்திரன்**
அவர்கள் நாம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு எமது பாடசாலையிலும் (யா/இராமநாதன் கல்லூரி) தங்களது வீட்டிலும் கடினமான கணிதத்தை கனிவாகக் கற்பித்தவர். எங்கள் குருவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(CS/28580)

**இராமநாதன் கௌதமன் (2015)**
**இராமநாதன் திலோத்தமன் (2018) மாணவர்கள்**
**(யா/மகாஜனக் கல்லூரி)**

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
0768226241
**V2 Travels**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதனார்மடம் 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## வடமாகாணத்திற்கு கிடைத்த வரப்பிரசாதம்

Arbitration Act, No.11 of 1995 மேற்படி சட்ட மூலத்தின் பிரகாரம் இற்றை வரைக்கும் கொழும்பிலுள்ள மேல் நீதி மன்றத்தில் மட்டுமே நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் விடயங்கள் சம்பந்தமான வழக்குகளைத் தொடர முடியும். ஆனால் ஒரு வருடமாக உரியவர்களின் வழிகாட்டலின் கீழ் மேற்கொண்ட முயற்சியினால் யாழ் மேல் நீதி மன்றத்திற்கும் நீதி அமைச்சினால் மேற்படி வழக்குகளை நடாத்துவதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்டதனை இதன் மூலம் வடமாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒப்பந்த நிறுவனங்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகவே கருதுகின்றோம்.

மேற்படி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எமக்குச் சட்ட ஆலோசனைகளை வழங்கிய சிரேஷ்ட **நியுணத்துவ பொறியியலாளர் திரு.சி.உருத்திரலிங்கம்** அவர்களிற்கும். புகழ் மிக்க இளம் சட்டவாளர் **திரு.P.மோகனதாஸ்** அவர்களிற்கும். எமது கோரிக்கைக் கடிதங்களை ஏற்று செயற்படுத்துவதற்குதவிய கௌரவ **கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்** அவர்களுக்கும். **கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.மாவை.சேனாதிராஜா அவர்களுக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்** அவர்களுக்கும் நேரடி தொடர்பை ஏற்படுத்தி விடயங்களை செயற்படுத்திய **கௌரவ நீதி அமைச்சர் திருமதி தலதா அத்துகொரல்ல** அவர்களுக்கும் வடமாகாண மக்கள் சார்பாக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணிப்பாளர், M.S.P Lanka Centre Engineering, கொக்குவில், கிளிநொச்சி.**

## மரண அறிவித்தல்

## மயில்வாகனம் பரமநாதன்

**(ஓய்வுபெற்ற இ.போ.ச நடத்துனர், கோண்டாவில்)**



இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி, இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பரமநாதன் (04.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் றோசம்மா தம்பதியினரின் மருமகனும் சண்முகேஸ் வரியின் அன்புக் கணவரும் அகிலன் (ஹொலண்ட்), விஜிதா (ஜேர்மனி), சசிதா (ஜேர்மனி), கேசவன் (செலிங்கோ லைஃவ் யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற சோபிதா மற்றும் பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலினி (ஹொலண்ட்), வசிகரன் (ஜேர்மனி), வரதராஜன் (ஜேர்மனி), அஜந்தா ஆகியோரின் மாமனாரும் சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), இரத்தினபூபதி, இந்திரலீலா, மோகனலீலா காலஞ்சென்ற சகுந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் மகேஸ்வரன், சிவேஸ்வரி, யோகேஸ்வரி காலஞ்சென்ற பரஞ்சோதி காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் புலேந்திரநாதன், வேலு ஆகியோரின் மைத்துனரும் தயாநிதி, சிவநாதன் ஆகியோரின் சகலனும் அனுஷன், அபிஷா (ஹொலண்ட்), வர்ஷா, வர்ணி, கனிமொழி, சாய்ராம் (ஜேர்மனி), துளிர்நிலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2019) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ் வீதி,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.